திருக்கோணமலை

விபுலானந்தா கல்லூரி

# விபுலானந்த சிவ ஆலய
# மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்



வெளியீடு:

**விபுலானந்தா கல்லூரி**

திருக்கோணமலை

15.07.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

தி / தி / விபுலானந்தா கல்லூரி

விபுலானந்தா சிவ ஆலய

# கும்பாபிஷேக மலர்



வெளியீடு:


விபுலானந்தா கல்லூரி,

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்...


- ✓ ஆசியுரைகள்
- ✓ வாழ்த்துரைகள்
- ✓ படைப்புக்கள்
- ✓ நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடல்

விபுலானாந்த சிவனே
விரிசடை கொண்ட பரனே.
விண்ணோர் போற்றும் முதலே
விடை ஏறும் அரனே
சங்கரா சிவசிவ சங்கரா சிவசிவ...
சங்கரா சிவசிவ சங்கரனே (விபுலானந்த)

பாரோர் போற்றும் பரனே
பார்பதி பாகம் அமர்ந்தவனே
தீராப்பிணியைத் தீர்ப்பவனே
திருகோணேஸ்வரம் அமர்ந்தவனே
சங்கரா சிவசிவ சங்கரா சிவசிவ... (விபுலானந்தா)

திருக்கோணமலை நாடி வருவோருக்கு
தரிசனம் கொடுக்கும் சந்தியிலே
அமைந்த எங்கள் கல்லூரியில்
அமர்ந்தாய் வந்து சிவபரனே.
சங்கரா சிவசிவ சங்ககரா சிவசிவ... (விபுலானந்தா)

ஆதி அனாதி ஆனவனே
அன்பே சிவமாய் இருப்பவனே
நீதி நெறிகள் தழைத்தோங்க
நின்று வழி காட்டிடுவாய்
சங்கரா சிவசிவ சங்கரா சிவசிவ... (விபுலானந்த)

மாசுக்கள் அகற்றும் மகேஸ்வரா
மாணவர் கல்வி உயர்வு பெற
மகேஸ்வரி மணாளா மாதேவா
மனமுவந்தருள் செய்வாயே
சங்கரா சிவசிவ சங்கரா சிவசிவ... (விபுலானந்தா)

**சிவஞானம் மகேந்திரத்தார்**
இல.38/2 ஸ்பெல்லின்வீதி
உவர்மலை, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

ஈஸ்வரனுக்கே பெருமை சேர்க்கும் வகையில். கோணேஸ்வர பூமியில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்த அடிகளின் பெயரில் விபுலானந்த சிவஆலயம் ஸ்தாபிப்பது திருகோணமலை மக்களுக்கு கிடைத்தற்கரிய ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

*1947* ல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே இது பிரார்த்தனைக் கூடமாக விளங்கியது. சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களினால் சரஸ்வதி சிலை ஸ்தாபிக்கப்பட்டது. விநாயகர் சிலையும் ஸ்தாபிக்கப்பட்டு வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களினால் பஜனைகள் இசைக்கப்படுகின்றது. ஆவணி விநாயக சதுர்த்தி, நவராத்திரிவிழா என்பன வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. பஞ்சாட்சர மந்திரம் உச்சாடனம் செய்யப்பட்டு வருகின்றது.

சிவவழிபாட்டினை அடித்தளமாகக் கொண்ட இவ் ஆலயம் விபுலானந்த சிவஆலயம் என அழைக்கப்படுவது மிகவும் பொருத்தமானதாகும். எதிர்கால பாடசாலை மாணவர்களுக்கும் திருகோணமலை மக்களுக்கும் சிவவழிபாட்டுத்தலமாக அமைக்கப்படும் இவ் ஆலயம், பாடசாலை அதிபர் திரு ஆர்.ஜெரோம், ஆசிரியர்கள் ஆகியோர்களின் வழிகாட்டலுடன், ஆலய நிர்வாகத் தலைவர் திரு.கு. நளினகாந்தன் அவர்களுடைய நிர்வாகக்குழுத் தலைமையில் *15-07-2019* திங்கட்கிழமை காலை *9.45 - 10.30* வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆசி கிடைக்கவேண்டுமென பிரார்த்தனை செய்கின்றேன்.

இங்ஙனம்,
வேதாகமாமணி
**சிவஸ்ரீ. சோ.இரவிச்சந்திர குருக்கள்,**
ஆலய ஆதின கர்த்தாவும்,
பிரதம குருவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நமச்சிவாய

# விபுலானந்தா சிவாலய கும்பாபிஷேக மலர்

## ஆசியுரை

*சிவசிவ என்கிலர் தீவினையாளர்*
*சிவசிவ என்றிடத் தீவினை மாளும்*
*சிவசிவ என்றிடத் தேவருமாவர்*
*சிவசிவ என்னச் சிவகதி தானே".*

*திருமந்திரம்*

தேவாரப் பாடல் பெற்றதும் தட்சண கைலாயம் எனப் போற்றப்படுவதும் எல்லாம் வல்ல கோணேசப் பெருமான் கோயில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திருகோணமலை நகரின் நுழைவாயிலில் அமைந்த கஞ்சிமட மகாவித்தியாலம் என அழைக்கப்பட்ட கல்விக் களஞ்சியமே தி/விபுலானந்தா கல்லூரியாகும்.

இக்கல்லூரியில் அமைக்கப்பட்ட விபுலானந்த சிவாலயம் சிவசக்தியையும் பலசித்திகளையும் அள்ளி வழங்க ஆசிவழங்குவதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

ஏறத்தாழ 72 வருடங்களுக்கு முன் இக் கல்லூரி ஒரு பிரார்த்தனை மண்டபமாக உருவாக்கப்பட்டது. இச்சிந்தனையின் செயல்பாடும் தூரநோக்கு செயல்பாட்டின் வெளிப்பாடாகவே இன்று இவ்வாலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றது. இவ்வாலயமானது இச்சூழலில் ஒழுக்கபண்பாட்டு மாணவர்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கு அமரர் சுவாமிஜி தந்திரதேவா அவர்களால் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையும் பின் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகர் சிலையும் இன்று இவ்வாலயம் இவ்வாறு அமையும் என்பதை எடுத்துக்காடடுகின்றது.

'இறையன்பும், இறைவழிபாடும்' இதன் அடிப்படையில் செய்யப்படும் கிரியை முறைகளும் மனித இனத்தை நல்வழிப்படுத்தியதை எம் சமய வரலாறுகள் எமக்குக் காட்டியுள்ளன. இதேவழிமுறையில் தான் ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இம்மண்டபத்தில் சமய அனுட்டானங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது இவ்வாலயம் சிறப்பாக அமையும் என்பதை காட்டுகின்றது.

நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இயங்கிக்கொண்டிருக்கும், இப்பாடசாலைக்கு இவ்வாலய அமைப்பானது மாணவர்களை மட்டுமல்ல சிறந்த ஒழுக்கமுள்ள சமுதாயத்தையும் வளர்க்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவையாவற்றையும் விட இவ்வாலயம் 'விபுலானந்தா சிவாலயம்' என்ற பெயரைத் தாங்கியிருப்பது கிழக்கு மாகாணத்துக்கே பெருமை தருவதாகும்.

இது பாராட்டப்பட வேண்டியதாகும். அது மட்டுமல்ல இவ்வாலய அமைப்பின் சிந்தனை எம்மையும் சிந்திக்க வைப்பதுடன் அதன் தலைவர் குமாரசாமி நளினகாந்தன் குழுவினரை பாராட்டவும் வைக்கின்றது.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு இனிதே நிறைவேறவும், இம் மலர் சிறப்புறவும், பயனுள்ளதுமாக அமையவும் இனிதே வாழ்த்தி எல்லாம் வல்ல கோணேசப் பெருமானின் அருளுடன் எனது நிறைவான ஆசியினை வழங்குகிறேன்.

**மு. சண்முக இரத்தினக்குருக்கள்,**
ஆலய பிரதம குரு,
திருக்கோணேஸ்வரர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.
Email - rkmcey@gmail.com
Phone - 2588253
5013805
Fax - 2361438

# ஆசிச் செய்தி

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் உள்ள விபுலானந்தா சிவ ஆலய கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதாக அறிந்தேன். கும்பாபிஷேகம் எனும் கிரியை அங்குள்ள தெய்வத்தின் சாந்தி நித்தியத்தை மீண்டும் நிலைநிறுத்த செய்யப்படும் ஒரு விழாவாகும். இந்நிகழ்வில் மக்களின் நேரடிப் பங்குபற்றல் இருப்பதால் அவர்களுக்கு ஒரு ஆன்மீகப் புத்துணர்வை ஏற்படுத்துவதற்கு இது ஒரு உதவியாக இருக்கின்றது. இந்த ஆலயம் விபுலானந்தா கல்லூரியில் அமைந்துள்ளது. மாணவர்களுக்கு இறை வழிபாட்டைச் சிறு வயதிலிருந்தே பயிற்றுவிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றது. அத்துடன் மாணவர்களின் பெற்றோர்களுக்கும் இவ் ஆலயம் ஒரு வரப்பிரசாதமாகிறது.

மேலும் கும்பாபிஷேகம் அடிக்கடி நிகழும் விழா அல்ல. சாதரணமாக சுமார் 12 ஆண்டுகளுக்கொருமுறை நடக்கும் இந்நிகழ்வு ஒரு அற்புதமான விடயமாகும். விசேஷட கோமங்கள் விதவிதமான நிவேதனங்கள் பலவிதமான அலங்காரங்களுடன் விழா விமர்சையாக இருப்பது இன்னொரு சிறப்பு. ஒரு பக்கம் வேதமுழக்கத்துடனும் இன்னொருபக்கம் பண்ணிசை ஓதலுடனும் நிகழும் அபிஷேகமானது கண்கொள்ளாக் காட்சியாகும். இவற்றுடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நிகழ்ந்து அடியவர்களுக்கு ஒரு கலை விருந்து போல் அமையும். இதனைக் கண்டு களிக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பது அரிது. இதனை ஏற்பாடு செய்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

இந் நிகழ்வை முன்னிட்டு ஒரு மலர் வெளியிடப்படுவது பொருந்தியதே. கும்பாபிஷேகம் சம்பந்தப்பட்ட கருத்துகளையும் ஆலய வரலாறு பற்றியும் தொகுத்து வெளியிடப்படுவது பலருக்கும் பிரயோசனமாக அமையும். நமது வருங்காலத் தலைமுறையினர். இவ்வாலயத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள இம்மலர் உதவியாக இருக்கும். கும்பாபிஷேகம் செவ்வனே நிகழவும், மலர் சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

சுவாமி அக்ஷராத்மானந்த்

சுவாமி அக்ஷராத்மானகத்
தலைவர் கொழும்பு 26-06-2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

மேற்படி ஆலயத்தை நிர்மாணிக்கும் பெரும் பணியை மேற்கொண்ட இந்துமாமன்றத்தினர் பெரு முயற்சியை மேற்கொண்டு இப் பணியினை ஆற்றியுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகள் அனைவரும் கல்வி கற்று மேன்மையுற வழி செய்துள்ளனர். இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் சீரான சிறப்பான பணியினை மேற்கொண்டுள்ளமைக்கு செந்தமிழ் சைவ சமுதாயம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளதோடு இப்பாடசாலை சிறப்பான நடைமுறையோடு ஒழுங்கு செய்து வளர்ச்சியுற வேண்டும் என எல்லாம் வல்ல கோணமலையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் தென்கைலாயம் என்ற பெயருக்கு உகந்ததாக ஆலயத்தை உருவாக்கிய அனைவர்க்கும் கோணாமலை ஐயன் திருவருளால் எல்லா நலனும், அனுகூலமும் மேன்மையும் பெற வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

தொண்டர் இ. சண்முகராசா
திருக்காளாதீஸ்வரர் ஆலயம்
கப்பல்துறை
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# திரு விஸ்வநாத சுவாமி (சிவன்) கோவில் அறங்காவலர் சபை

திருக்கோணமலை

## The Board Trustees Of
## Thiru Visvanatha Swami (Sivan) Kovil Trincomalee

**Mr. K. Selvarajah**
President

**Mr. T.Thavasilingam**
Secretary

**<u>ஆசியுரை</u>**

Date : ..........................

வீணைக் கொடியுடையோன் வீற்றிருந்த கோணநகர் வளங்கள் சூழ தேன்பாயும் நதிவிழுந்து இருபோகம் விளையும் பசும்வயல் வெளிகள் மீன்பாடும் குரை கடலில் வெள்ளி அலை துள்ளி விழும் மலைத்தொடர்கள் வானுயர்ந்த மறை பொழிந்து சம்பந்தர் பதிகம் பெறும் தென்கையிலைப் பூமியிதாம்.

திருகோணமலையின் யாழ் வீதியும், கண்டிவீதியும் சந்திக்கின்ற சந்தியான அனுராபுரசந்தி என்னும் இடத்தில் ஒரு பாடசாலையை அமைப்பதற்கு அதன் ஸ்தாபகரான அமரர் திருவாளர் கதிரித்தம்பி அவர்களின் பெரும் முயற்சியால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையானது கஞ்சிமடம் மகா வித்தியாலயம் என்று அன்று அழைக்கப்பட்டு வந்தது.

திருக்கோவில் அமைவது திருவருட்செயல் என்பது அனுபூதிமார்களின் திவ்விய மொழியாகும். திருக்கோயில் அமைப்பதற்கு ஒருவரின் அல்லது பலரின் பூர்வ புண்ணிய பலனே அவர்களை அப்புனித கைங்கரியத்தில் ஈடுபடவைக்கிறது.

விபுலானந்த சிவ ஆலயம் விபுலானந்தாக் கல்லூரியில் விபுலானந்தா இந்து மாமன்றத்தின் முயற்சியால் இப்புனித நிகழ்வு நடைபெறுகிறது. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்னும் மணிவாசகரின் வாக்கின்படி எல்லாம் வல்ல சிவனின் திருவருள் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்ளும் அனைத்து மக்களுக்கும் மாணவ செல்வங்களுக்கும் ஆசியைப் பெரு மக்களுக்கும் பாடசாலை நிறுவாகத்தினருக்கும் சிவனின் திருவருள் மூலம் சகல சௌபாக்கியங்களையும் தந்து அருள வேண்டி எல்லாம்வல்ல விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானை வேண்டி எமது நல்லாசிகளை உரித்தாக்குகின்றோம்.

தலைவர்
திரு.விஸ்வநாதசுவாமி (சிவன்)
தேவஸ்தானம்
திருகோணமலை

Mr. V. Pusparajah
Mr. T. Sarvanantham
Vice President

Mr. M. Balasingam
Treasurer

Mr. V. Srinivasan
Assistant Secretary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

புராதன பெருமை வாய்ந்ததும் பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரர் குடிகொண்டுள்ள திருகோணமலை மண்ணில் தனது ஆன்மீக ஆசிரிய சேவையினை ஆற்றிய அரிய துறவி விபுலானந்தரது பெயரில் ஓர் சிவாலயம் அமைவது அவருக்கு இம் மண் செலுத்தும் நன்றியும் பண்புமாக அமைகின்றது. இன்று மனிதனுக்கு மன அமைதியை ஆன்மீகம்தான் வழங்க முடியும் என்ற முடிவுக்கு உலக சிந்தனையாளர்கள் பலரும் வந்து கொண்டிருக்கும் நிலையில் விபுலானந்தா கல்லூரியில் அமைந்துள்ள விபுலானந்த சிவாலயமானது மாணவர்களை பண்புள்ளவர்களாக மாற்றும் நல்லொழுக்க விழுமியங்களை இறைபக்தியூடாக வளர்த்தெடுக்கும் என்பதில் ஐயமில்லை. அன்பும் அறச்சிந்தனையும் உள்ள மாணவர்கள் எதிர்கால சமூகத்தின் ஒளி விளக்காக திகழ்வார்கள். எனவே இவ் நற்காரியத்தை எனக்கு ஆரம்ப அறிவூட்டிய பாடசாலையில் மேற்கொண்ட இந்து மாமன்றம், அதிபர், ஆசிரியர், நலன்விரும்பிகள் அனைவரும் மாண்புற கோணநாத பெருமானை வேண்டுவதோடு உலகம் உள்ளவரை விபுலானந்த சிவாலயம் விழிப்பூட்டும் ஆலயமாக சிறக்க வாழ்த்துகின்றேன்.

கா.அருந்தவராஜா

மேலதிக அரசாங்க அதிபரும், மேலதிக மாவட்ட செயலாளரும்,
மாவட்ட செயலகம்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

'சிவபூமி' எனவும் 'தெட்சிண கைலாயம்' எனவும் சிறப்பித்துக்கூறப் பெறும் திருகோணமலையிலே பல தொன்மைவாய்ந்த, வரலாற்று சிறப்பும், இதிகாச புராணச்சிறப்பும், தேவார முதலிகளால் பாடல் பாடப்பெற்ற சிறப்புகளும் நிறைந்த சிவாலயங்கள் பல காணப்படுகின்றன. இந்தவகையிலே ஒரு பாடசாலை சூழலில் மாணவர்களின் சமயப் பழக்கவழங்கங்களையும், கல்வியையும் ஒருங்கு சேர வளர்க்கும் முகமாக தி/விபுலானந்தா கல்லூரியில் அமையப்பெற்ற 'விபுலானந்தா சிவாலயம்' விளங்குகின்றது.

கிழக்கிலங்கையிலே சைவத்தையும், தமிழையும் ஒருங்கே வளர்த்த பெருமை சுவாமி விபுலானந்த அடிகளாரைச் சேரும். அவரின் பெயரைத் தாங்கி அமைக்கப்பட்ட பாடசாலையே விபுலானந்தா கல்லூரி ஆகும். இது 1947ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இங்கு மாணவர்களின் வழிபாட்டிடத்தில் சுவாமி தந்திரதேவா மகராஜ் என்பவரால் சரஸ்வதி சிலை ஸ்தாபிக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் வழிபாட்டிற்காக விநாயகர் விக்கிரகமும் ஸ்தாபிக்கப்பட்டு பாடசாலை சமூகத்தால் தினசரி வழிபடப்பட்டுவருவதுடன், பஜனை, பக்திப்பாமாலைகள் படித்தல், மற்றும் நவராத்திரி, சிவராத்திரி, குருபூசைகள் போன்ற சமயவிழாக்களையும், வழிபாட்டுமுறைகளையும் சிறந்த முறையில் செய்து வருகின்றனர்.

தற்போது 'விபுலானந்தா சிவாலயமாக' குடமுழுக்கு செய்யத்திருவருள் கொண்டுள்ள வேளையிலே இவ்வாலயம் அமைய உதவிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் ஆடவல்லானாம் சிவனின் அருள்கிடைக்க பிரார்த்திப்பதோடு இக்கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தேறி பாடசாலை மாணவர்களும், பாடசாலை சமூகமும் அன்பும் பண்பும் நிறைந்த சிறந்த சமூகமாக உருவாக எல்லாம் வல்ல சிவனை வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**பிரதீபன்,**
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகிற்கு ஆன்மீக வழிகாட்டிய மண்ணின் மகான்கள்

**1. சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி**

திருகோணமலையில் 1907 மார்கழி 8ம் நாள் அவதரித்த பெண்துறவியான இவர் இலங்கையின் முதலாவது பெண்துறவியாகவும் உலகத்தில் அன்னை சாரதாதேவிக்கு பின் வந்த இரண்டாவது துறவியாகவும் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். ஆசிரிய தொழிலில் அதிபராக சேவையாற்றிய இவர் சிவானந்தா மிஷனது முதலாவது பெண்துறவியாக உலகில் வலம் வந்ததோடு தென்கையிலையான திருமலையில் சிவானந்தரது பெயரில் ஆச்சிரமம் நிறுவி தனது சொத்துக்களை எல்லாம் நன்கொடையாக்கி சிவானந்தா தபோவனத்தை 1953ல் நிறுவிய முதலாவது பெண்மணி ஆவார். உணவு, உடை, கல்வியினை சிறார்க்கு வழங்கியதுடன் இலங்கையில் முதலாவது தெய்வீக கழகத்தை நிறுவி துறவிகளையும் ஆன்மீக சொற்பொழிவுகளையும் நடாத்தியதோடு திவ்விய சங்கத்தையும் ஸ்தாபித்தவர். இவரது உருவச்சிலை 2009ல் திருகோணமலை காந்தி சேவை சங்கத்தினால் அவரது சிவானந்த தபோவனத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

**2. இல்லறயோகி அப்பாத்துரை செட்டியார்.**

திருகோணமலையினை பிறப்பிடமாகவும் செல்வந்த செல்வந்த செட்டியாராகவும் உள்ளுவதை உரைப்பதன் (Mind reading) மூலம் தன்னை நாடி வரும் அடியார்களது துயர்கு வழிகூறி அப்பாத்துரை செட்டியார் எனும் பெயருடன் சாதாரண வாழ்வில் ஆன்மீக வாழ்வு வாழ்ந்து காட்டிய மகான். இவர் தனது இறுதி பயணத்தின் குறித்த நேரத்தை முன் கூட்டியே கூறி அந்த குறித்த நேரத்தில் இருந்த நிலையில் சமாதி எய்தியவர் இவரது உடலை அவரது இல்லத்தின் ஒரு பகுதியிலேயே சமாதி வைத்து அடியவர்கள் வழிபட்டு வருகின்றனர். இவர் தனது சொத்துக்களை ஏழை சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில் இலங்கை இராமகிரு'ண சபையினர்கு அன்பளிப்பு செய்துள்ளமையும் இவரினதும் இவரின் குடும்பத்தினதும் பற்றற்ற வாழ்வியலையும் ஆன்மீக ஈடுபாட்டினையும் கோடிட்டு காட்டும் செயலாக அமைந்துள்ளது.

**3. சிவபுராண தொண்டர் சண்முகராசா**

திருகோணமலையினை பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருக்குன்றக்குடி அடிகளாரால் ஆட் கொள்ளப்பட்டு சிவநெறியில் நின்று வாழ்ந்ததுடன் கப்பல்துறை மலையில் திருக்காளத்தீஸ்வரர் எனும் சிவ ஆலயத்தினை அமைத்து அப்பகுதி மக்களின் ஆன்மீக விழிப்புணர்விற்கு வித்திட்டதுடன் திருகோணமலையில் சாதித்துவத்திற்கெதிராக ஆலயங்களை திறப்பதில் முன்னின்றுழைத்ததுடன் வள்ளுவர் கழகம் எனும் அமைப்பூடாக ஏழைச்சிறார்கு கல்வியினை வழங்கினார் திருமலை முத்துக்குமாரசுவாமி வீதியில் இவரது தொண்டர் சபையும் அரிய புத்தகங்களை கொண்ட வாகிகசாலையும் இன்றும் அறிவூட்டும் இடமாக திகழ்வதுடன் திருவாசக முற்றோதலை திருமலையில் சிறப்பாக நடத்திய பெருமையும் அறிஞர்களை கொண்டு அறிவூட்டிய சிறப்பும் இவருக்கே உரியதாகும்.

**4. சுவாமி கெங்காதரானந்தா**

கேரளாவினை பிறப்பிடமாக கொண்ட இவர் கோணேசப் பெருமானால் ஈர்க்கப்பட்டு அங்குள்ள குகைகளில் தவத்தினை மேற்கொண்டு அருட்சக்தி பெற்றுக் கொண்டதோடு "சிவயோக சமாஜம்" எனும் ஆன்மீக நிறுவனத்தை நிறுவி உலகெங்கும் அதன் கிளைகளை ஸ்தாபித்ததோடு தனது சீடர்களையும் இப்புனித சேவையில் ஈடுபடுத்தினார். திருமலை நகரிலிருந்து ஆறு மையில் தொலைவில் ஓர் நடேசர் ஆலயத்தினை அமைத்து அதனை சுற்றி நடேசபுரி எனும் இந்து குடியேற்றத்தையும் நிறுவியுள்ளது சிறப்பாகும்.

**5. சுவாமி தந்திரதேவா மகாராச்**

இவர் அமெரிக்காவை பிறப்பிடமாக கொண்டவராயினும் பின் இந்து சமயத்தின் மீது பற்றுக் கொண்டு இந்தியாவில் தீட்சை பெற்று திருகோணமலையில் நிரந்தரமாக வாழ்ந்தவர். இவர் இந்துசமய அபிவிருத்தி சபை எனும் அமைப்பினை நிறுவி அதனூடாக இலங்கை பூராகவும் அறநெறிப் பாடசாலைகளையும் சிறுவர் இல்லங்களையும் பராமரித்ததுடன் கிராமங்கள் தோறும் ஆலயங்களை அமைத்தும் புனரமைப்பிற்குதவியும் வந்ததுடன் ஆலயங்களில் பஜனைப்பாடல்களையும் சொற்பொழிவுகளையும் மேற்கொண்டு இந்துசமய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார் இவரது உருவச்சிலை மட்டு நகரில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நிர்வாகத் தலைவர்
தி/விபுலானந்தா கல்லூரி
திருகோணமலை.

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இன்றைய சமூக நிலையில் கலை கலாசார பண்பாடு என்பன நலிவடைந்து செல்வது பலராலும் பேசப்படும் விடயமாக உள்ளது.தென்னிந்திய திரைப்படங்கள, தொலைக்காட்சி நாடகங்கள், இணையதளம். முகப்புப்புத்தகம், கையடக்கத் தொலைபேசி மற்றும் போதைவஸ்து என்பன இளைய தலைமுறையினரிடையே கலை,கலாசாரக் கட்டுக் கோப்புக்களை பாதிக்கும் காரணியாகத் திகழ்கின்றது.

எனவே பாடசாலைகளே இவற்றை முதலில் சீர் செய்யும் கடமைப்பாட்டைக் கொண்டுள்ளன.நல்லதோர் சமூகத்தைக் கட்டியெழுப்பப் பாடசாலைகளே நல்லதிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இந்த முயற்சியின் ஒன்றாகவே இக்கல்லூரியில் சிவன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயமானது "விபுலானந்த சிவாலயம்" என அழைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் மாணவர்களுக்கு, அவர்களது குடும்பத்தினருக்கும் பாடசாலை அயற்கிராம மக்களுக்கு சிவ வழிபாட்டுத் தலமாக சிறப்படையச் செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இறை ஆசியும் பாடசாலைச் சமூகத்தின் ஆதரவுடனும் புதுப் பொழிவு பெற்றது சிறப்பாகும்.

இவ்வாலயம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மாணவர்களின் சிவ வழிபாட்டுக்கு ஏற்புடையதாக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையில் ஈடுபட்ட கல்லூரி அதிபர் மற்றும் அவரோடிணைந்து செயல்பட்ட ஆலயத் தலைவர். அங்கத்தவர்கள் மற்றும் அனைவரையும் பராட்டுவதுடன், இவ்வாலய கும்பாவிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு எனது நல்லாசியினை வழங்குவதுடன், சிறந்த முறையில் இம்மலர் வெளிவர வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

திருமதி.வளர்மதி ரவீந்திரன்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

திருமதி. வ. ரவீந்திரன்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திருமூலரால் 'சிவபூமி' என போற்றப்பெறும் தேவாரச் சிறப்பும், இதிகாசபுராணச் சிறப்பும் கொண்ட திருகோணமலையிலே "நித்திலங் கொழிக்கும் கோணமாலையமர்ந்தாரே" எனும் தேவராப் பதிகம் பாடப் பெற்ற கோணேஸ்வரம் போன்ற இந்துக்களுக்கான வழிபாட்டுத்தலங்கள் பல காணப்படுகின்றன. இவ்வாறு சிறப்புற அமையப்பெற்ற ஆலயங்களில் "தி/ விபுலானந்தா சிவ ஆலயமும்" ஒன்றாகும்.

சைவமும் தமிழும் தழைத்தோங்க வழிவகுத்த ஆலயங்களின் வரிசையில் விபுலானந்தா பாடசாலையில் உள்ள விபுலானந்தா சிவ ஆலயம் சிறந்த சமயப் பணியினையும், தமிழ்ப் பணியினையும் ஆற்றிவருகின்றது. இவ்விருபணிகளையும் ஒருங்கே ஆற்றுவதில் விபுலானந்தா சிவாலயம் சிறப்புப் பெறுகின்றது. 1947 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விபுலானந்தாப் பாடசாலையில் மாணவர்களின் வழிபாட்டிடத்தில் சரஸ்வதி சிலை ஒன்றினை சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்கள் ஸ்தாபித்தார். பின்னர் மாணவர்களின் வழிபாட்டினை மேலும் சிறப்படையச் செய்யும் வண்ணம் விநாயகர் விக்கிரகமும் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாறு அன்று தொட்டு பஜனை, குருபூசைகள், நவராத்திரி மற்றும் சிவராத்திரி விழாக்கள் மூலம் மாணவர்களின் சமய விழுமியப் பண்புகளை வளர்க்கும் இடமாகவும் இப் பாடசாலை விளங்குகின்றது.

இவ்வாறாக தமிழையும், சமயத்தையும் ஒருங்கே வளர்க்கும் இப் பாடசாலையில் அமைக்கப் பெற்ற இச் சிவாலயதின் 'பெரும்சாந்தி விழாவாகிய' மகாகும்பாபிஷேகப் பெருவிழாவை நடாத்துவதற்கு அயராது பாடுபட்டுவரும் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம், நலன்விரும்பிகள் மற்றும் அயலவர்கள் அனைவருக்கும் எம்பெருமானின் அருளும் ஆசியும் கிடைக்கவும், இவ்விழா சகலசிறப்புக்களும் பெற்று நிறைவு பெறுவதற்கும் எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'**

**ஜே.எஸ்.அருள்ராஜ்,**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி

'இராவணதேசம்' என அழைக்கப்படும் சிவ பூமியான எமது திருக்கோணமலை நகரில் மேற்குத் திசையில் அநுராதபுர சந்தியில் அலங்கரித்துக் கொண்டிருக்கும் எமது விபுலானந்தா கல்லூரி வளாகத்தில் எமது கல்லூரி இந்து மாமன்றத்தினால் அழகுற அமைக்கப்பட்டுள்ள 'விபுலானந்தா சிவாலயம்' எமது நீண்ட நாள் கனவாகும். இதன் மூலம் எமது மாணவர்களின் ஆன்மீக ஈடுபாட்டை அதிகரிப்பதோடு நல்ல சமய விழுமியங்களையும் மாணவர்களிடையே கட்டியெழுப்பவும் நல்ல வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

அத்துடன் எமது கல்லூரியைச் சூழவுள்ள சுமார் மூன்று மைல் சுற்றுவட்டாரத்தில் ஒரு சிவனாலயம் இல்லாத குறைபாட்டையும் நீக்கியுள்ளது. மேலும் சிவபக்தனான இராவணன் கூட எமது கல்லூரியைத் தாண்டியே கன்னியா சென்று தனது தாய்க்கு இறுதிக் கிரியைகள் செய்ததாக இந்து சமய வரலாறு கூறுகின்றது. எனவே சிவ பக்தன் இராவணன் கால் பதித்த இந்த அநுராதபுர சந்தியில், சுவாமி விபுலானந்தரின் நாமத்தைத் தாங்கிய எமது கல்லூரியில் இவ் ஆலயம் அமையப் பெற்றது சாலப் பொருத்தமானது. அதுவும் எனது காலத்தில் இப் புனித கைங்கரியத்தை செய்யக் கிடைத்தமையையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதன் மூலம் என் சமூகத்திற்கு ஒரு சிறு தொண்டாற்றிய திருப்தியை நான் பெற்றுக்கொண்டவனாக உணர்கிறேன். இதற்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல கோணேசப் பெருமானுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இவ் ஆலயத்தை அமைப்பதிலே மிக உறுதியோடும், செயற் திறமையுடனும் செயற்பட்டு எமது நோக்கத்தை நிறைவு செய்த எமது கல்லூரி இந்து மாமன்றத் தலைவர் சகோதரன் திரு.குமாரசாமி நளினகாந்தன் ஆசிரியரின் அர்ப்பணிப்பான பணியை பாராட்டியே ஆக வேண்டும். மேலும் அவருக்கு உறுதுணையாக செயற்பட்ட இந்து மாமன்றச் செயலாளர், பொருளாளர், மற்றும் ஏனைய அங்கத்தவர்களான ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இவ் ஆலயத்தை அமைப்பதற்காக ஆரம்பத்தில் அடிக்கல் நாட்டிய திருக்கோணமலை ஆலடி விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சுந்தரலிங்கம் தேசிகர் ஐயா அவர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிசேஷக நிகழ்வுகளை சிறப்பாக செய்து முடித்த திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதின கர்த்தா பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக்குருக்கள் ஐயா அவர்கட்கும் எனது இதய பூர்வமான பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இவ் ஆலயம் அமைப்பதற்காக சமூக ஆர்வலர்களிடம் உதவிகள் கோரிய போது பொருட்களாகவும், நிதி நன்கொடைகளாகவும் வழங்கிய தனவந்தர்கள், சமூகப் பற்றாளர்கள், எமது கல்லூரி பிரதி அதிபர்கள், தற்போதைய, மற்றும் முன்னை நாள் ஆசிரியர்கள், பெற்றார்கள், பழைய மாணவர்கள், ஊர் மக்கள், புலம்பெயர் தேசத்தில் வாழ்பவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் எமது கல்லூரியின் ஆய்வுகூட உதவியாளர் திரு.ஞா.ஸ்ரீதரன் அவர்களின் உதவிகளுக்கும், ஒத்துழைப்புக்களுக்கும் ஆலயத்தை அமைப்பதில் அவர் காட்டிய ஆர்வத்திற்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, எமது கல்லூரியில் கடமை புரியும் இந்து மதம் சாராத ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கும் அவர்கள் செய்த உதவிகளுக்காக பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக இவ் ஆலயத்தின் மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள், பழைய மாணவர்கள், ஊர் மக்கள் அனைவரும் நல்ல பயனையும், நல்ல அருளையும் பெற வேண்டும் எனவும், இவ் ஆலயத்தை சிறப்பாக பேணிப்பாதுகாக்க வேண்டும் எனவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து இச் சிறப்பு மலருக்கான எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

திரு.ஆர்.ஜெறோம்,
அதிபர் (இ.அ.சேவை-1)
தி/தி/விபுலானந்தா கல்லூரி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

சிவபூமி என்றழைக்கப்படும் ஈழத்தின் கிழக்கிலங்கையில் மாண்புமிகு கோணநாதப்பெருமான் அருள்பாலிக்கும் தெட்சணகைலாயம் என புகழ் பெற்ற திருகோணமலை நகரில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்ட **விபுலானந்தா சிவஆலயத்தின்** கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதற்கு வாய்ப்புக்கிடைத்ததையிட்டு எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து நிற்கின்றேன்.

இவ் ஆலயமானது 1947இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் தொடக்க காலத்திலிருந்தே பிரார்த்தனை செய்யும் இடமாகக் காணப்பட்டு பின்னர் சுவாமி தந்திரதேவா அவர்களினால் சரஸ்வதி சிலை ஸ்தாபிக்கப்பபட்டு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் மாணவர்களினால் பஜனை இசைக்கப்பட்டு பூசை வழிபாடுகளும் இடம்பெற்று வந்துள்ளது.

அதன்பின்னர் படிப்படியாக இவ்வாலயமானது இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் பெற்றோரினால் கட்டியெழுப்பட்டு, இன்று **"விபுலானந்தா சிவஆலயமாக"** ஆகம முறைப்படி அமைக்கப்பட்டு எம்மாணவர்களின் இறைவழிபாட்டிற்கு உறுதுணையாக நிற்கின்றது. விபுலானந்தா கல்லூரியின் மாணவர்களின் இறைநம்பிக்கையில் சைவபண்பாட்டு, கலாச்சார மரபுகளையும் பேணிப்பாதுகாப்பதற்கு இவ்வாலயமானது பெரும்பங்காற்றியுள்ளது. இவ்வாலயத்தின் வாயிலாக இப்பாடசாலையினதும் எமது சமூகத்தினதும் கலாச்சார, பண்பாட்டினைப் பேணுவதற்கும் நிலைத்து நிற்பதற்கும் இவ்வாலயம் அவசியம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் மேற்கொள்ளப்பட்ட இவ்வாலயத்தின் பணிசிறக்க அயராது உழைத்த பாடசாலையின் அதிபர் திரு.ஆர்.ஜெரோம், இவ்வாலய பணிக்குழுத்தலைவர் திரு.கு.நளினிகாந்தன் மற்றும் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு எனது மனங்கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.தே.ஜயந்தன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

தென்கயிலை என்று சிறப்பிற்கும் திருக்கோணஸ்வரம் அமைந்த பூமியில் சுவாமி விபுலானந்தர் நாமத்தை கொண்ட விபுலானந்தா கல்லூரியில் சிவாலயம் ஒன்று அமைக்கப்பட்டதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலைகளில் ஆன்மீகஸ்தாபனங்கள் உருவாக்கப்படுவது மாணவர்களின் ஒழுக்கவிழுமியங்கள் மற்றும் நற்பண்புகள் சிறக்க வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலயம் அமைத்தல் என்பது தவம் மட்டும் இன்றி அது ஒரு வரம் இந்த தவத்தையும் வரத்தையும் சிறப்புடன் மேற்கொண்ட அதிபர் திரு.ஆர்.ஜெரோம் அவர்களுக்கும் இப்பணிபை சிரம்மேற்கொண்டு முடித்த இந்துமாமன்ற தலைவர் குமாரசாமி நளினகாந்தன் அவர்களுக்கும் அவர்களின் குழுவினர்களுக்கும் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.தி.பார்த்தீபன்,**
உதவி கல்விப் பணிப்பாளர்,
ஆரம்பப் பிரிவு,
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

திருமூலரால் நாமமிட்ட சிவபூமிதனிலே குணதிசையில் அமைந்து குன்றென விளங்கும் பாடல் பெற்ற தலமது கொண்ட திருகோணமலையின் கண் கோயிலினை விஞ்சும் மற்றொரு ஆலயச்சிறப்பு சுவாமி விபுலானந்தரின் நாமம் பொறிக்கப்பெற்ற தி/விபுலானந்தா கல்லூரியில் "விபுலானந்த சிவாலயம்" எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரைப்பதில் மிகவும் மகிழ்வடைகிறேன்.

மனிதனை மனிதப் பண்புடையவர்களாக மாற்றி சமுதாயத்துக்கு உயர்ந்த பல நன்னெறிமிக்க மாணவச் சமூகத்தை தோற்றுவிப்பதில் பாடசாலைக்கு மிகப்பெரிய பங்குண்டு. இக்கல்லூரியில் அதிபராய் இருந்த காலத்தில் நான் கண்ட கனவு நனவாவதையிட்டு அகமகிழ்கிறேன்.

வரலாற்றில் பல தசாப்தங்களைக் கடந்து இன்று பல்வேறு பரிணாமங்களுடன் மாவட்ட, மாகாண, தேசிய நிலையிலும் இக் கல்லூரி முன்னிலையில் திகழ்ந்துகொண்டிருப்பது எம் அனைவருக்கும் பெருமை தருவதாகும்.

சுவாமி விபுலானந்தர் தனித்துவமானவர். ஆன்மீகம், சமூகம், கல்வி, இலக்கியம் என பல துறை சார்ந்ததாக அவரது பணிகள் அமைந்தன. அதேபோல விபுலானந்த நாமம் பதிக்கப்பெற்ற சிவாலயம் எதிர்காலத்தில் மாணவச் செல்வங்கள் அன்பும், அறனும், நல்லொழுக்கமும் நிறைந்தவர்களாய் உருவாவதற்கும், அறநெறிக் கருத்துக்களை எடுத்து விளக்கி உயர்ந்த உண்மைகளை அவர்கள் மனதில் விதைத்து இளம் உள்ளங்களில் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களை ஊன்றச்செய்வதற்கும் உறுதுணையாக நிற்பதற்கு வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு.கோ.செல்வநாயகம்**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோட்டகல்வி அலுவலகம், திருகோணமலை.
தலைவர்
சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணேசர் பூமியில் விபுலானந்தர் சிவாலயம்

"திருகோணமலை சிவபூமி என்பது வரலாற்று உண்மை."

யோகர் சுவாமிகள் திருகோணமலையில் நடக்கும் போது எங்கும் சிவலிங்கம் தெரிகிறது. கால் வைக்கவே கலக்கமாக இருக்கின்றது என்றாராம்.

சுவாமி விபுலானந்தர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றும் போது ஒரு புனிதமான கல்லைத் தெரிந்தெடுத்து பொருத்தமான இடத்தில் பிரஷ்டை செய்து தினமும் சிவ வழிபாடு செய்தார் என்பதையும் இந்துக் கல்லூரியில் உள்ள கோவிலில் அந்த சிவ சொரூபம் தகுந்த இடத்தில் வைக்கப்பட்டு இன்றும் போற்றி வணங்கப்படுகின்றது என்பதையும் நாம் அறிவோம்.

எனவே சுவாமி விபுலானந்தரின் பெயரை கொண்டு கல்வி ஒளிபரப்பும் விபுலானந்தா கல்லூரியில் அமைந்துள்ள இந்த சிவாலயம் இக் கல்லூரியில் கற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் காவல் தெய்வமாகவும், இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் மனித விழுமியங்கள் மிளிர்கின்ற நற்பிரஜைகளாகவும் ஒழுக்க சீலர்களாகவும், மலர்ச்சி பெற இந்த சிவாலயம் என்றென்றும் அருள்பாலித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.

**நா. புவனேந்திரன்,**
மேலதிக அரசாங்க அதிபர் (ஓய்வு நிலை)
சாயி இல்லம்,
105 கந்தசாமி கோவில் வீதி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

பண்பாளர்களை உருவாக்கும் பணியினை செவ்வனே ஆற்றும் ஸ்தாபனமாக பாடசாலைகளே அடையாளப்படுத்தப்படுகின்றது. இவ்வகையில் எமது சமூகத்திடையே காணப்படும் இடைவெளியினை ஈடு செய்வதற்கு தி/விபுலானந்தா கல்லூரியும் கல்லூரியில் அமைந்துள்ள விபுலானந்த சிவன் ஆலயமும் இப்பணியை சிறப்பாக செயற்படுத்தி தமிழ் சமூகத்திடையே பண்புள்ள, ஆன்மீக, அறிவு, ஆளுமை நிரம்பிய தலைவர்களை உருவாக்கி சமூகத்திற்கு பயன் பெற வழி சமைக்க வேண்டும் என்பதோடு பொருத்தமான இடத்தில் பொருத்தமான காலத்தில் நிறைவு செய்து மக்களின் ஆன்மீக விருத்திக்கு வழியமைத்தது பாராட்டுக்குரியது.

எனவே இப்பணியை திறம்பட செய்து முடித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய நல் உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

பாரதி இராஜரட்ணம்,
பிரதம ஆசிரியர் (ஞாயிறு)
தினக்குரல்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமியில் விபுலானந்த சிவ ஆலயம்

தெட்சண கைலாயம் எனப் போற்றப்படுகின்ற திருக்கோணமலை நகரின் நுழைவாயிலிலே அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் விபுலானந்த சிவ ஆலயம் என்ற பெயரிலே ஒரு புதிய ஆலயம் அமைக்கப்பட்டு கடந்த 15.07.2019 இல் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளமை குறித்து இம் மாவட்டத்திலுள்ள இந்துமக்கள் அனைவரும் பெருமைப்படுகின்றனர்.

திருக்கோணமலை பாடல் பெற்ற புண்ணிய பூமியாகும் "குடிதனை நெருக்கி பெருக்கமாய்த் தோன்றும்" கோணைநாதர் உறைகின்ற இப்புண்ணிய பூமியில் கோவில்களுக்கு பஞ்சமில்லை. வெருகலம்பதி தொடக்கம் தென்னமரவாடி வரையும் அமைந்துள்ள கோவில்களின் வரலாறுகள் புராண இதிகாசப்பின்னணிகள், ஆலய அமைப்பு முறைகள் மக்களின் பண்பாடு வாழ்க்கை நெறிகள் என்பன பற்றி ஆராயப்பட்டுள்ளன இன்னும் ஆராயப்படவேண்டியுமுள்ளது.

இம்மாவட்டத்திலே திருக்கோணேஸ்வரம் தம்பலகமம் ஆதி கோணைநாதர் கோவில், கங்குவேலி சிவன் கோவில், விசுவநாதசுவாமி கோவில், கந்தளாய் சிவன்கோவில், திருமங்களாய் சிவன் கோவில், அகத்தியர் தாபனம் முதலான வரலாற்றுப் பெருமை கொண்ட சிவ ஆலயங்களைக் காணலாம்

அந்தச் சிவ ஆலயங்களின் வரிசையிலே இப்போது விபுலானந்த சிவஆலயம் ஒரு புதிய ஆலயமாக எழுந்துள்ளது. ஒரு கல்விச்சாலையில் இச்சிவ ஆலயம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரின் பெயரிலே அமைந்துள்ள கல்லூரியில் அமைக்கப்பட்ட ஆலயத்திற்கு விபுலானந்த சிவ ஆலயம் எனப்பெயரிடப்பட்டிருப்பதும் பொருத்தமானதாகவே உள்ளது. தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் பெருந்தொண்டாற்றிய சமயத்துறவியான விபுலானந்தரின் பெயரோடு இந்த ஆலயம் திகழ்வது பெருமைக்குரியதாகும்.

சில பெரிய பாடசாலைகளில் சைவ ஆலயங்கள் அமைந்திருப்பதை நாம் காண்கின்றோம். உயர்தர தொழில்நுட்பக் கற்கைகளுக்கு பிரபலமாகியுள்ள விபுலானந்தா கல்லூரியிலும் இப்போது புதிய சிவ ஆலயம் அழகுடன் காட்சியளிக்கின்றது. மாணவர்களுடைய ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு நெறிகளை மேம்படுத்துவதற்குரிய ஒரு வாய்ப்பாக இந்த ஆலயம் அமையும் என நம்புகின்றேன்.

இந்த ஆலயத்தை அமைப்பதற்கு பாடுபட்டுழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் யாவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விபுலானந்த சிவனின் அருளாசியினால் விபுலானந்தா கல்லூரியின் வளர்ச்சியும் புகழும் மேன்மையுறும்.

**சி.தண்டாயுதபாணி,**
முன்னாள் கல்வி அமைச்சர்,
கிழக்கு மாகாணம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

திருகோணமலை மாவட்டத்தில் 72 வருடகால கல்விப்பணியை நிறைவு செய்த தி/விபுலானந்தா கல்லூரி நகரின் நுழைவாயில் அமைந்து சிறந்த முறையில் கல்விப்பணியை ஆற்றி வருவதையிட்டு மகிழ்வடைகின்றேன். இக் கல்லூரியின் முதல் அதிபராக அமரர் வி.கதிர்காமத் தம்பி அவர்கள் பொறுப்பேற்று தொடர்ந்து பல அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் வழிகாட்டலின் கீழ் உயர்வடைந்து நிற்பது பெருமைக்குரியது.

"இறைவனுடைய திருவடியைச் சிந்தையுள்வைத்துச் சிரத்தை மீதுவர்ந்த உள்ளத்தனாய், இன்பதுன்பங்களினால் அலைவுறாது எமக்கு ஏற்படும் மயக்கத்தை நீக்கிச் சாந்தம் , பொறுமை, தயை என்னும் நற்குணங்களைப் பூண்டுநிற்போன் ஆன்ம சக்தி நிறைவினாலே செயற்கரியனவற்றைச் செய்து முடிப்பான்" என்ற சுவாமி விபுலானந்த அடிகளாரின் பொன்மொழிக்கேற்ப இன்றைய சமூகத்தினரதும் காலத்தினதும் தேவையறிந்து இக்கல்லூரியின் மாணவர்களது ஆன்மீகச் செயற்பாட்டை வழிப்படுத்தும் நோக்கில் ஆகம முறையில் "விபுலானந்தா சிவாலயம்" அமைக்கப்பட்டு 15.07.2019 கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதையிட்டு உளமார வாழ்த்துகின்றேன்.

இவ்வாலயத்தின் மூலம் மாணவர்களது கல்வியுடன், இணைவிதானச் செயற்பாடுகளையும், சமய அறநெறி விழுமியங்களையும் கட்டியெழுப்பி கருமத்தை இடைவிடாது தொடர்ந்து சமநிலையோடு கூடி நின்று முயற்சி செய்தல் வேண்டும். உங்கள் முயற்சியினாலே செயற்கரியவற்றை செய்யலாம் என மேலும் வாழ்த்துகின்றேன்.

கல்வியும் ஒழுக்கமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவைஇ. "ஆலயம்" என்பது ஆன்மா ஒடுங்கும் இடமாகும் எனவே ஆலயம் கல்லூாயில் அமைக்கப்பட்டது என்றும் வரவேற்கத்தக்கதாகும். கல்லூரியின் காலை ஆராதனை வழிபாட்டுடன் மாணவர்களும், அக்கல்விச் சமூகத்தினரும் மன அமைதியும, நிறைவும் [illegible]

இக்கல்லூரி விபுலானந்தரது நாமத்தை தாங்கி நிற்பதன் மூலம் விபுலானந்தரது தூய கல்விச் சிந்தனைகளும், நவீன கல்வி அமைப்பிற்கு ஏற்ற வகையில் தொடர்ந்தும் பயணிக்கும் என்பதில் ஐயமில்லை சிறந்தொரு எதிர் காலசமூகத்திற்காக நிறுவப்பட்ட ஆலயத்திற்கான பணியை முன்னின்று நடத்திய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழையமாணவர்கள் அனைவருக்கும் விபுலானந்தா சிவாலயத்தின் அருள்பாலிக்க இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

திரு.செ.பத்மசீலன்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தி/ தி/ விபுலானந்தா கல்லூரியில் அமையப்பெற்றுள்ள விபுலானந்தா சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு, இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் என்ற வகையில் பெருமகிழ்வு கொள்கின்றேன். இக்கல்லூரியின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாக இவ்வாலயம் திகழ்கின்றது. பல்வேறு சாதனைகளையும் மாற்றங்களையும் கண்ட இக்கல்லூரியில் தற்பொழுது சிவன் ஆலயம் தோற்றம் பெற்றிருப்பது இக்கல்லூரியினை மேலும் நிறைந்த பொலிவுடையதாக்கியுள்ளது.

ஓர் ஆலயத்தை அமைப்பது என்பது சாதாரண விடயம் அல்ல, மிகவும் கடினமான ஓர் பணியாகும். அதிலும் இவ்வளவு அழகாக இவ்வாலயத்தை முழுமைப்படுத்தி கும்பாபிஷேகம் காண்பது என்பது மிகமிக கடினமானதாகும்.

காலத்தின் தேவை அறிந்து இக்கல்லூரிச் சமூகத்தின் சமய, கலை , கலாசார, சமூக, விழுமியங்களை பாதுகாக்கும் நோக்கோடு இவ்வாலயத்தை அமைக்கும் கைங்கரியத்தில் தம்மை அர்ப்பணித்த அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினரையும், இப்புனித பணிக்கு சகல வழிகளிலும் உதவிய நல் உள்ளங்களையும் மனதார பாராட்டுகின்றேன்.

சமய ரீதியாக பண்படுத்தப்பட்ட மாணவர்கள் மூலமே எதிர்காலத்தில் ஒழுக்க ரீதியாக மேம்பட்ட ஒரு சமூகத்தை தோற்றுவிக்க முடியும். அந்தவகையில் இவ்வாலயத்தின் தோற்றப்பாடானது இக்கல்லூரியில் எதிர்காலத்தில் ஓர் மேம்பட்ட, தரமான சமூக தோற்றப்பாட்டிற்கு அடித்தளமாக அமையும்- அமையவேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகள்வரை அனைத்தையும் இனிதே நிறைவுபெறச் செய்த அனைவருக்கும் எம்பெருமான் பாதம் போற்றி எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

" மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

திரு.பூ.புவனேஸ்வரன்

அதிபர்

தி /தி / நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி


'தரமான சமூகத்தை உருவாக்கும்' பாடசாலைப் பணிகளில் சமூக விழுமிய பண்புகளுடனான உளவிருத்தியை ஏற்படுத்த சமயவழிபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வகையில் மாணவரிடத்தில் ஆன்மீக உணர்வுகளை ஏற்படுத்துவதனூடாக நற்பண்புகளை வளர்க்க முடியும்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதற்கமைவாக இக்கல்லூரியின் இவ்வாலயப் பணி பல நற்பண்புகளையும் நல்லெண்ணங்களையும் வளர்க்க உதவும்.

'உள்ளக்கலமடி உத்தமனார் வேண்டுவது' என்றியம்பிய விபுலானந்த அடிகளாரின் நாமத்தை தாங்கிய எமது ஸ்ரீவிபுலானந்தா கல்லூரியின்' சிவன் ஆலயத்தின் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தி/ பள்ளிக்குடியிருப்பு
தோப்பூர்.

**ஆ. செல்வநாயகம்,**
முன்னாள் அதிபர்,
பிரதிக் கல்விப்பணிப்பாளர் (ஓய்வு)
திருகோணமலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

ஆதியும், அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியாகவும் தொன்மைமிகு சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகவும் எம்மை எல்லாம் காத்து வழிகாட்டும் தெய்வம் சிவபெருமான்.

மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவது சமயமாகும். எம்மை நாம் அறிந்து இவ்வுலக வாழ்வில் மனித நேயத்துடன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டுவது சமயமாகும்.

பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி அறிவுடன், சிறந்த அறநெறிப்பண்புகளைப் பெற்றுக்கொள்வது அவர்களது எதிர்கால வாழ்விற்கு சிறப்பானதாக அமையும். அந்தவகையில் எமது விபுலானந்தா கல்லூரியில் அமைக்கப்பட்ட 'விபுலானந்த சிவாலயம்' ஓர் வரப்பிரசாதமாக மாணவர்களுக்கு திகழும் என்பது திண்ணமாகும்.

அதனடிப்படையில் இச்சிவாலயத்தை அமைக்க அரும்பாடுபட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து நல் உள்ளங்களையும் வாழ்த்துகின்றேன்.

அத்துடன் சிவனின் அருள்பெற்று எமது பாடசாலை வளம்பெற இறைவன் ஆசியை வேண்டுகின்றேன்.

திருமதி. மஞ்சுளா உதயரெட்ணம் (SLPS 2)
பிரதி அதிபர்,
தி/ விபுலானந்தா கல்லூரி,
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

எமது தி/தி/விபுலானந்தா கல்லூரியின் வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய மிகப்பெருமையாக இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள சிவ ஆலயத்தை குறிப்பிடலாம்.

'முயற்சி திருவினையாக்கும்' என்பது போல இந்துமாமன்றத்தினரின் அளப்பரிய முயற்சியால் உருவானதே இவ் ஆலயம். எண்ணங்கள் பலரின் மனதில் எழலாம். ஆனால் அவ் எண்ணத்திற்கு செயலுருவாக்கம் கொடுத்து அதனை வடிவமைப்பதிலே திறமை தங்கியுள்ளது.

அது போலவே இக் கல்லூரியில் ஆலயம் அமைப்பது பற்றி பலர் பல எண்ணங்களை கூறியிருந்தாலும் அது கதை வடிவமாக மட்டுமே இருந்து வந்தது. அதனை முறியடித்து பல சவால்களுக்கு மத்தியில் 'எந்தவித நிதி கையிருப்பும் இன்றி தொடங்குவோம். அதனை இறைவன் முடித்துவைப்பான்' என்ற இறைநம்பிக்கையுடன் தொடங்கப்பட்ட இத்திருப்பணி இன்று முற்றுப்பெற்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மக்களின் இறையருளுக்காக வழங்கப்பட்டுள்ள இவ்வாலயம் இக் கல்லூரி உள்ள வரை இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆசி வழங்குவதுடன் அதிபர், பிரதிஅதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், பெற்றார், நலன்விரும்பிகள் குறிப்பாக இந்துமாமன்றத்தினரின் உழைப்பிற்கு ஒரு சான்றாகவே திகழும் என்பது நிதர்சனமானதோர் விடயமாகும்.

**ஜி.அருளேந்திரன்**
(பிரதி அதிபர்)
தி/விபுலானந்தா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

உலகிலே ஆன்மீகம்தான் மனிதனை மனிதனாக வாழவைக்கிறது. ஆன்மீகத்தை உணராததினாலேயே மானிட சமூகத்தில் குழப்பம் ஏற்படுகின்றது. நன்மை, தீமை, பயம் என்பவற்றை உணராததினாலேயே தாங்கள் செய்யும் செயல் அனைத்தும் சரியென சிலர் நம்புகின்றனர். ஒவ்வொருவரும் செயற்படும் விதத்திலே அவர்களது மனநிலையும் காணப்படுகிறது. நிலைத்த நல் மெய்ஞானத்தால் நிதானமாய் திட்டமிட்டுச் செயற்படும் நிலை அனைத்தும் ஆன்மீக அறிவின் செயற்பாடென்றே குறிப்பிட வேண்டும்.

சமூகம் ஒருவரை மதிப்பதோ அவருக்கு மரியாதை கொடுப்பதோ அவர் கொண்டுள்ள குணாம்சங்களினாலேயாகும். 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது ஆன்றோர் வாக்கு. 'ஊழ்வினை வந்து உறுத்தும்' எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. முன்னைப்பிறவி நன்மைப் பயனே இம்மைப் பிறவியென சித்தாந்தம் சொல்கிறது. தீயவழியில் செயற்படுவோர், தீங்கொடுமை செய்வோர், இவ்வாறு தீயவழியில் செயற்பட்டு வாழ்வாதாரம் தேடுவோருக்கு இவை மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். இவையெல்லாம் தற்காலிகமானதே என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மானிட வாழ்வியல் என்பது இன்பதுன்பங்களுக்கு அடிமைப்பட்டது. ஆடம்பரம், அந்தஸ்து, புகழ் இவையனைத்தும் மாயைத் தோற்றமே. பிறப்பு உண்டேல் இறப்பு உண்டென்பது யாவரும் அறிந்த உண்மை. ஆன்மீகத்தை உணர்ந்தவர்களினால் தான் உண்மை வாழ்வைப் பற்றி புரிந்து கொள்ளமுடியும்.

ஆன்மீகத்திற்கு அப்பால் நிற்போர் நினைப்பதெல்லாம் தாங்கள் அழியாப்பிறவி என்று, ஆன்மிகத்தில் ஊறியவர்கள் மானிட வாழ்வின் மோசடிகளைக் கண்டு துடிக்கின்றனர். மானிட துன்பங்களை நீக்க எண்ணி பிரமச்சரியம், துறவறத்தை கடைப்பிடித்து மானிட நலம் காக்க முனைகின்றனர். ஆன்மீகம் இளம் வயதிலிருந்தே ஊறி வளரவேண்டும். ஆன்மீகத்தை ஊட்டுவதில் முதற்படி ஆலயமாகும். ஆலயவழிபாடுகளும், வணக்கமுறைகளும், மனதிற்கு சாந்தி, அமைதி என்பவற்றை ஏற்படுத்துகிறது. உள்ளத்தை தூய்மைப்படுத்துகிறது. நல்லெண்ணம் பிறக்க வழி செய்கிறது. எனவே ஆன்மீகம் இளமை தொட்டு தொடரவேண்டும். இதனை நோக்காகக் கொண்டு விபுலானந்தாக் கல்லூரியில் சிவனுக்கு ஆலயம் அமைத்து மாணவர்கள் வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்கின்றமையை இட்டு கல்லூரி நிர்வாகத்தினருக்கு நன்றியும் பாராட்டும் உரித்தாகுக.

"ஆன்மீகம் வாழ்க வளர்க என்று கூறி நிறைவு செய்கின்றேன்."

திருமதி.ச. சத்தியபாமா
சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர்
கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

'அறநெறி இல்லா வாழ்வு அர்த்தமற்ற வாழ்வாகும்' என முன்னோர்கள் கூறியுள்ளனர். தற்காலத்தில் இளம் சிறார்களை அறநெறிப்பாதையில் இட்டுச்செல்வது காலத்தின் தேவையாக உள்ளது. அறநெறி வழிகாட்டலில் அடித்தளமாக விளங்குவது ஆலயமாகும். ஆலயவழிபாடுதான் முதலில் சிறார்களை நன்நிலைப்படுத்துகின்றது. ஆலய வழிபாட்டுமுறைகளை மாணவர்கள் கடைப்பிடிப்பதினால் மாணவர்களுக்கு மனநலம், உடல்நலம் ஆகிய இரண்டு நலன்களும் கிடைக்கின்றது.

இந்த வகையில் இவ்வாலயத்தை அமைப்பதில் முன்னின்றுழைத்த இக் கல்லூரி அதிபரையும் அவருடன் இணைந்து செயற்பட்ட திரு.கு.நளினகாந்தன் உள்ளிட்ட ஆசிரியர் குழாமையும் பராட்ட வேண்டும்.

சிவபூமி என்றழைக்கப்படுகின்ற திருகோணமலை மண்ணிலே சிவனுக்குரிய ஆலயமாக முத்தமிழ் வித்தகர் நாமம் இணைந்த 'விபுலானந்த சிவ ஆலயம்' அமைக்கப்பட்டு சிவனைப் பிரதிஷ்டைப் செய்து மாணவர் வழிபாட்டிற்கு வழிசெய்த அனைவருக்கும் முன்னை நாள் இந்து கலாச்சார உத்தியோகத்தர் என்ற ரீதியில் எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு விபுலானந்தா சிவனின் பிரதிஸ்டா கும்பாபிஷேகம் இனிதே நடைபெறவேண்டும் என எல்லாம் வல்ல திருக்கோணேஸ்வரப் பெருமானை வேண்டி எனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

நன்றி

**சிவஞானம் மகேந்திர ராஜா,**
ஓய்வுநிலை
மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

'முத்தமிழ் வித்தகர்' சுவாமி விபுலானந்தருடைய பெயரைக் கொண்டு விளங்கும் தி/விபுலானந்தா கல்லூரியின் சிவன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

"கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" என்று நற்றமிழ் வல்ல திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப் பெற்ற திருக்கோணேஸ்வரம் எனும் திருத்தலத்தையுடைய திருகோணமலை நகரின் கண் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் சைவசயத்தின் முழு முதற்கடவுளான சிவலிங்கம் பெருமானை ஸ்தாபித்து பிரதிஸ்டை செய்து மாணவ மணிகளின் ஆன்மீகச் செயற்பாட்டிற்கும் ஒழுக்க விழுமியங்களுக்கும் மற்றும் பண்பாட்டினை விருத்தி செய்வதற்கும் வழி அமைத்துக் கொடுத்தமை போற்றத்தக்கதும் பாராட்டத்தக்கதுமாகும்.

இது போன்ற நற்கருமங்களை மாணவ சமுதாயத்தின் வளர்ச்சி கருதி செவ்வனே நிறைவேற்றிய பாடசாலையின் முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், நலன் விரும்பிகள் அனைவரையும் பாராட்டி இம்மலர் சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வீ. கோணேஸ்வரன்,**
கலாசார உத்தியோகத்தர்,
பட்டணமும் சூழலும்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

தேவாரம் பாடப்பெற்ற தெய்வத்திருநகரான தெட்சண கைலாயமான திருக்கோணமலையிலே விபுலானந்தா கல்லூரியில் அமைந்து அருளாட்சிபுரியும் அருள்மிகு "விபுலானந்தா சிவ ஆலயத்தின் மலருக்கு" வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

பெறுதற்கரிய மனிதப்பிறவியைப் பெற்ற நாம் அன்புவழியில் தர்மசிந்தனையுடன் வையத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது சமயமாகும்.

அந்தவகையில் வருங்கால சமுதாயமாக விளங்கும் மாணவர்கள் ஆன்மீக வளர்ச்சியடைய இவ் ஆலயம் வழிகாட்டியாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

'சிவாயநம' என்னும் நாமம் எப்பொழுதும் இவ் ஆலயத்தில் அதிஉய்த்துணரப்பட்டு எமது மாணவச் செல்வங்களை நன்நெறியில் இட்டுச்செல்ல எல்லாம் வல்ல மாதுமை அம்பாள் உடனுறை திருக்கோணேஸ்வரப் பெருமான் திருவருட்பெருங்கருணை புரிய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

'ஓம் சிவாய நம'

சிவஞானச்செல்வர்
**செல்லப்பா சிவபாதசுந்தரம்,**
தலைமைச் செயலாளர்,
இலங்கை இந்து இளைஞர் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

'வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்கை இல'

திருக்குறள்-4

எனும் வள்ளுவ பெருந்தகையின் கூற்றுக்கு இணங்க இறைவனது திருவருளைப்பெற்று நிறைவான மகிழ்வு, வாழ்வு வாழ சமயம் வழிகாட்டுகின்றது.அந்த வழிபாட்டின் மூல நாதமே ஆலய வழிபாடு, பக்தி, மனத்தூய்மை இவையே வழிபாட்டின் முக்கிய தேவை.

திருகோணமலையில் எல்லையில் சிறப்போடு விபுலானந்தா பாடசாலையில் சுவாமி தந்திரதேவா மகராஜ் அவர்களினால் சரஸ்வதி சிலை ஸ்தாபிக்கப்பட்டது. காலப்போக்கில் சைவமக்களின் வழிபாட்டு தலமாகி தற்போது 'விபுலானந்தா சிவனாலயம்' கும்பாபிஷேகம் கண்டுள்ளது.

பாடசாலை அதிபர் திரு.ஆர்.ஜெரோம் ஆலய நிர்வாகசபைத் தலைவர் திரு.கு.நளினகாந்தன் அவர்களது தலைமையில் இவ்வாலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளது. 'கொடுத்தவர்கள் ஏற்று திருப்பணி கும்பாபிஷேகம் செய்தவர் இன்மையிலும் மறுமையிலும் சிவப்பதப்பேறு பெறுவர்' என்பது ஆகமங்களின் வாக்கு.

எமது வாழ்த்துக்களுடன் ஆலய வரலாறு ஆன்மீக கட்டுரைகள் தாங்கி வெளிவரும் கும்பாபிஷேக மலர் யாவருக்கும் நற்பயனுடையதாகட்டும்.

இவ்வண்ணம்
**திரு. காளியப்பு சிவசுப்பிரமணியம் (J.P),**
தம்பலகாமம் பட்டிமேடு,
சிந்தாமணிப் பிள்ளையார்,
ஆலய தர்மகர்த்தா,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலயத் தலைவரது செய்தி

சிவ பூமியென சிறப்பிக்கப்படும் திருக்கோணேஸ்வரர் குடி கொண்ட திருகோணமலையின் கண் விபுலானந்த சிவலாயம் எதற்காக எனும் கேள்வி நியாயமானதாயினும் விபுலானந்தருக்கும் இம் மண்ணிற்குமான தொடர்பு யாது என சிந்திக்கும் போது ஆலயம் சிறப்புப் பெறுவதையும் அவசியமாவதையும் பண்பில் உயர்ந்து நிற்பதனையும் உணர்ந்து கொள்ளலாம்.

ஸ்ரீ இராமகிருஸ்ண மடாலயத்தின் இலங்கையின் முதல் துறவியான சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் திருகோணமலை இந்துக் கல்லூரி அதிபராக கடமையாற்றிய வேளையில் இம் மண்ணின் மைந்தர்களின் அறிவு, ஆன்மீக வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய தொண்டினை நாம் மறந்து விட்டோம் என்ற குற்ற உணர்வு எமது மனதில் நீண்ட நாட்களாக நிலைத்திருந்தது. 'அவர் வாழ்ந்த வீடு புனிதமானது காப்பகமாக காப்பாற்றப்பட்ட வேண்டியது கைமாறிவிட்டதே என்ற ஏக்கம் தணியாது இருந்தது' இதற்கொல்லாம் பரிகாரமாகவே திருகோணமலையின் நுழைவாயிலில் சுவாமியினுடைய பெயரை தாங்கி நிற்கும்.

பாடசாலையில் சிவ ஆலயத்தை அமைத்து அதற்கு அவரின் புனித பெயரினை இணைத்து 'விபுலானந்தா சிவாலயம் என பெயரிட்டு, எமது பாடசாலை சமூகத்தினூடாக திருமலை வாழ்மக்களின் முழுமையான நன்றியினையும் பண்பினையும் தமிழ் பேசும் சமூகத்திற்கும் உலகத்திற்கும் பறைசாற்றியுள்ளோம். இக்காரியத்தினை ஆற்றிமுடிப்பதற்கு எம்முடன் கைகோர்த்து வீடு வீடாக பணம் சேர்க்க நடந்துதவிய ஆசிரியரர்களான திருமதி.மதிவதனி, திருமதி. லோஜி, செல்வி.யசோதினி, செல்வி.அனுசியா, செல்வி.பிரியதர்சினி, செல்வி.ஜெயஸ்ரீ, திரு.விக்னேஸ்வரன், திரு.விமலானந்தம், திருமதி.உதயா, திருமதி.சர்மிலா, திருமதி.வேணி, திருமதி.நடேசபவானந்தம், திரு.கோபி போன்றோர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். திருமதி.கணேஸ்ராஜ், திரு.பிரதீபன், திருமதி.சாந்தி, திரு.ரூபன் ஆகியோரும் சிவனின் பேறு பெற்றவர்களே.

இதே போன்று தமக்கு அறிமுகமானவர்களிடம் உதவி பெற்றுதவிய திருமதி.கணேஸ்ராஜ், திரு.பிரதீபன் ஆகியோருக்கும் பால முருக ஆலய பொருளாளர் சதீஸ் அழகுற ஆலய கதவினை வழங்கிய விஜயகுமார் ஆகியோரும் மறக்க முடியாதவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தில் குடமுழுக்கினை மிகவும் சிறப்பாக நடத்தி உதவிய வணக்கத்திற்கும் கௌரவத்திற்குமுரிய வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திர குருக்கள் வரலாற்றின் பதிவில் மறக்க முடியாதவராவார். மேலும் இவ் ஆலய பதிவினை மேற்கொள்ள வழிகாட்டிய ஓய்வு நிலை மேலதிக அரசஅதிபர் திரு.புகேந்திரன், உதவி அரசஅதிபர் பிரதீபன், தினக்குரல் பிரதம ஆசிரியர் பாரதி போன்றோர் உலகமுள்ளவரை பேசப்பட வேண்டியவர்கள் என்றால் மிகையாகாது.

மேலும் எமது குழுவின் அங்கத்தவர்களில் சிறப்பாக சிறப்பிக்க வேண்டிய திருமதி.சர்மிலா அவர்களை சிறப்பிக்க வேண்டியது கடமையாகும். குழுவினரிடையே முரண்பாடு தோன்றாது ஓர் சுமுக உறவை மேம்படுத்தி தேவையான போது பொருள் உதவி நல்கிய நல்லுள்ளம் இதே போன்று செயல் ஊக்கத்துடன் செயலாற்றிய செயலாளர் திருமதி.நடேசபவானந்தம் அவர்களது சேவையும் சிறப்பானதாகும்.ஆலய அடிக்கல் நாட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்த திருமலை ஆலடி விநாயக ஆலய தர்மகர்த்தா சுந்தரலிங்கம் தேசிகர் அவர்களை நாம் என்றும் நேசிப்பவர்களாகவே இருக்கின்றோம். இறைவனது மன மகிழ்விக்கும் இச் செயற்பாட்டினை முழுமையுற செய்ய முழுமனதோடு மகிழ்ந்துதவிய கௌரவ அமைச்சர் மனோ கணேசண் அவர்கள் எம் எல்லோரதும் மனம் நிறைந்தவராக போற்றப்பட வேண்டியவர் என்றால் மிகையாகாது.

என்னோடு இப்புனிதபணியில் உடனிருந்து செயலாற்றிய அன்பு துணைவி காயத்திரியினது அர்ப்பணிப்பே என்னை இப்பணியை செவ்வனே நிறைவு செய்ய வழிசமைத்தது என்பதை நான் கூறியே ஆகவேண்டும் .

எனவே, எதிர் காலத்தில் சுவாமியின் அடி ஒற்றி உள்ளக் கமலத்தை காணிக்கையாக்கி ஏதிலிகளுக்கும், வறியோர்க்கும், வளமூட்டும் வழிபாட்டுத்தலமாவும், தர்மஸ்தாபனமாகவும் திகழ வேண்டும் என்பதே எமது அவா ஆகும்.

**குமாரசாமி நளினகாந்தன்,**
தலைவர்,
விபுலானந்தா சிவாலயம்,
தி/தி/விபுலானந்தா கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர் கூற்று

'இந்து சமுத்திரத்தின் முத்து' எனச் சிறப்புற்று விளங்கும் இலங்கையின் கண் 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து தேவார முதலிகளின் பாவாரத்தால் சூட்டப்பட்ட தென்கயிலை நாதர்' எனப் போற்றப்படும் திருக்கோணேச்சரப் பெருமான் அருளாட்சி புரியும் திருகோணமலைப் பதிதனில் 'முத்தமிழ் வித்தகர்' விபுலானந்தர் நாமத்தில் விளங்கும் விபுலானந்தா கல்லூரி வளாகத்தில் மூலப்பொருளாம் முக்கண்ணன் முதல்வன் கணபதி முன்வாயிலில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்க முக்கண்ணன் விபுலானந்த சிவனார் திரிசூலின் சத்தியையும் சத்திவேல் முருகனையும் பாகமாகக் கொண்டு, நந்தீஸ்வரர், பலிபீட மூர்த்தி ஆகியோருடன் நிலை கொள்ள வேண்டும் என்ற நியதிக்கு அமைவாக 'விபுலானந்த சிவன் ஆலயம்' அமையப் பெற்றுள்ளமை சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.

ஆசிரியர்களோ மாணவர்களோ அன்பர்களோ இறைவனை மெய்யன்போடு வணங்குவதன் மூலமே வாழ்க்கையில் சுபீட்சத்தையும், வெற்றியையும் நற்றகமைகளையும் அடைய முடியும் என்பது இந்து ஆசிரியர்களின் நினைவாகும். அவ் நினைவின் பிரகாரம் இவ் வளாகத்தில் ஆலயம் ஒன்று அமைக்க வேண்டுமென்பது நீண்ட நாள் கனவாகும். அக்கனவானது கல்லூரி முதல்வர் திரு ஆர். ஜெறோம் அவர்களின் பூரண ஆதரவுடனும் பெருமனம் கொண்ட இந்து ஆசிரியர்களினதும் கல்விசாரா ஊழியர்களினதும், இந்துமன்ற நிர்வாக சபைத்தலைவர் திரு.குமாரசாமி நளினகாந்தன் ஆசிரியரினதும், இந்துமன்ற நிர்வாக சபை உறுப்பினர்களினதும் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பின் பயனாகவும் 2019.01.21 ஆம் திகதியில் அடிக்கல் நடப்பட்டு ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது.

இவ் ஆலயத்தின் கும்பாபிஷேகம் வெகுவிமர்சையாக 2019.07.15 ஆம் திகதி சித்த திதியில் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் (திருகோணமலை பத்திரகாளி அம்பாள் தர்மகர்த்தா) தலைமையில் ஆச்சாரியர்களின் கிரியை ஆராதனையுடன் இனிதே நடை பெற்று முடிந்துள்ளது.

இறைவனின் மகிமையும், இவ் ஆலய வரலாறும் கும்பாஷேக நிகழ்வுகளும் அன்பர்களின் அர்ப்பணிப்புகளும் எதிர் காலத்தினருக்கு அடையாளம் காட்டப்படவேண்டியதொன்றாகும். அதன் அடையாளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விபுலானந்தா சிவன் மஹா கும்பாஷேகமலர்' ஒன்றை வெளியிட இந்து மன்ற நிர்வாக சபையினரின் ஆலோசனையுடன் கல்லூரி அதிபரினால் தீர்மானம் எடுக்கப்பட்டு மலர்க்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. மலரின் ஆசிரியராக என்னை நியமித்துள்ளமை 'ஆடவல்லான் சிவன்' எனக்களித்த பாக்கியமாக நினைத்து பெருமிதத்துடன் நன்றி கூறுகின்றேன்.

இம் மலரானது ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்வன்று மொட்டவிழ்ந்து ஆசிரியர் உரையுடன் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் கட்டுரைகள், கவிதைகள் என்ற பல்சுவை நிரம்பிய வடிவங்களில் மணம் வீச உள்ளது.

மலரானது நூலுருப் பெறுவதற்கு ஆக்கங்களை சேகரிப்பதில் பெரும் பணி நல்கிய தலைவர், மலர் குழுவினர். இந்து ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், ஆக்கங்கள் அனைத்தையும் வழங்கிய ஆச்சாரியர்கள், அதிகாரிகள், அன்பர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருடன் அச்சிட்டு நூலுருவாக்கிய அச்சகத்தினருக்கும் இந் நூலுக்கான நிதியுதவியினை பெருமனதோடு நல்கிய திருமதி.மீரா அசோக் அவர்களுக்கும் சிவனருள் கிடைக்க இறைவனிடம் பிரார்த்திப்பதுடன் நன்றி கூறுகின்றேன்.

ஓம் நம சிவாய
அகந்தை ஆணவம் குடி கொண்ட உள்ளத்தை
இறைவன் மலராக சூடார்.
அன்பும் அருளும் குடி கொண்ட உள்ளத்தை
இறைவன் மலராக சூடுவார்.

இதழாசிரியர்,
**திருமதி.பாலேஸ்வரி கேதீஸ்வரன்,**
தி/தி/விபுலானந்தா கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம் - 2019

தலைவர்:- திரு.N.நளினகாந்தன்
செயலாளர்:- திருமதி.S.நடேசபவானந்தம்
பொருளாளர்:- திருமதி.T.சர்மிளா

## கும்பாபிஷேகக் குழு

1. திருமதி.B.ஸ்ரீதரன்
2. திருமதி.B.கோகுலச் செல்வன்
3. திருமதி.J.முத்துமாரி
4. திருமதி.J.கணேஸ்ராஜ்
5. திருமதி.U.ஜெயச்சந்திரன்
6. செல்வி.S.பராசக்தி
7. செல்வி.P.நிசாந்தினி
8. திருமதி.K.சதானந்தன்
9. திரு.S.விக்னேஸ்வரன்
10. திரு.N.ஸ்ரீதரன்

## வரவேற்புக்குழு

1. திருமதி.J.மதிவதனி
2. திருமதி.R.சிவச்செல்வி
3. திருமதி.S.அருள்நேசன்
4. திருமதி.L.ரஜீந்திரன்
5. திருமதி.L.ஜனித்தகுமார

## அலங்காரக்குழு

1. திரு.K.ரவிகாந்தன்
2. திரு.T.கோபி
3. திருமதி.T.பிருந்தா
4. செல்வி.K.பிரியதர்ஷினி
5. திரு.S.அர்ச்சுனன்
6. திரு.S.செல்வராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலர்க்குழு

1. திருமதி.B.கேதீஸ்வரன்
2. திருமதி.J.சுதர்ஷினி
3. திருமதி.N.காயத்திரி
4. செல்வி.N.ஜெயஸ்ரீ
5. செல்வி.S.யசோதினி
6. திருமதி.M.ராதிகா
7. செல்வி.N.அனுஷியா

### அன்னதானக்குழு

1. திரு.P.பிரதீபன்
2. திரு.S.விமலானந்தம்
3. திரு.G.கங்காதரன்
4. திருமதி.V.ரட்ணராஜா
5. திருமதி.A.ஜனகன்
6. திருமதி.S.காளிராசா

### பொதிசெய்தல் குழு

1. திருமதி.B.பிரபாகரன்
2. திரு.S.தெய்வேந்திரராஜா
3. திருமதி.A.காந்தீபன்
4. திருமதி.L.யோகரெட்ணம்
5. திருமதி.K.சத்தியநாதன்
6. திருமதி.R.ஜீவித்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலானந்தர் – கீதம்

மட்டுநகர் தந்த செல்வம்மா - எங்கள்
எட்டுத் திக்கும் புகழ் மணக்குதம்மா
முத்தமிழ் காத்த வள்ளல் அம்மா - எங்கள்
மூத்தமிழ் போற்றும் முதல்வன் அம்மா (மட்டுநகர்)

தவ வாழ்வு வாழ்ந்த தாரகையாம் அம்மா
தேன்தமிழ் வளர்ந்த செம்மல் அம்மா
பன்மொழி கற்றே தமிழ் வளர்த்தார் - எங்கள்
செந்நாவில் தமிழை உறையச் செய்தார் (மட்டுநகர்)

சங்கத்தமிழ் வளர்த்த மண் அம்மா அதில்
பங்கமில்லா முதல் ஆசானாம் - அம்மா
மணம் வீசும் தமிழ் மதி மலர்ந்திடவே
மதங்க சூளாமணி தந்த மன்னன் அம்மா (மட்டுநகர்)

முத்தமிழ் வாழ முனைந்து நின்றார் - எங்கள்
முத்தான யாழ் நூலும் வடித்துத் தந்தார்
தித்திக்கும் தமிழ் தேன் சொட்டிடவே - அம்மா
எத்திக்கும் தமிழ் வளர்த்த தெய்வம் அம்மா (மட்டுநகர்)

ஈசன் உவக்கும் எம் விபுலானந்தர்
ஈசன் பாதம் இணைந்து சென்றார்
வாசம் வீசும் புகழ்தனையே - அம்மா
வாழும் தமிழர் நாம் வாழ்த்தி நிற்போம் (மட்டுநகர்)

வடக்கிலும் கிழக்கிலும் பணிபுரிந்தார்
எங்கள் வளமான தமிழை தத்தெடுத்தார்
ஈழம் ஈன்றெடுத்த இமயம் அம்மா
நாங்கள் இருகரம் கூப்பும் சுவாமி அம்மா (மட்டுநகர்)

திருமதி. சுதர்சனி ஜெயராஜ் பெர்னாண்டோ
ஆசிரியர்,
தி/விபுலானந்தா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அறங்காவலர் சபை



# மலர்க் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை இந்து சமய ஆசிரியர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...





பஜனைக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள் அறுபத்து நான்கு

கலைகள் மனிதனின் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பி இன்பத்தையும், கற்பனை வளத்தையும், மன நிறைவையும் அளிக்கவல்லது. இவ்வாறான கலைகளை அவற்றின் தன்மைக்கேற்ப சிலவற்றை லலித கலைகள் என்றும், மற்றையவற்றை சாதாரண கலைகள் அல்லது பொதுவான கலைகள் என்றும் வகுத்தனர். இவற்றில் கவின்கலைகள், நுண்கலைகள், இன்கலைகள், நன்கலைகள் என்று சிலகலைகள் இன்றியமையாதவையாக போற்றப்படுகின்றன.

'நுண்கலை' என்பது உணர்ச்சி வழியாக செவியினுள் புகுந்து இன்பம் பெறச் செய்கின்ற கலையாகும். அதாவது காதால் கேட்டு இன்பம் பெறக் கூடிய சிரவணக்கலை என்று போற்றப்படும் இசைக்கலை லலிதகலைகளுள் மிகவும் மேன்மையான கலையே இசைக்கலை ஆகும்.

இசை என்ற சொல்லுக்கு இசையவைப்பது என்பது பொருள். 'இசையால் வசமாகா இதயம் எது' என்ற வாக்கியத்திற்கு அமைய பறவைகள், மிருகங்கள் முதல் மனிதர்கள், தெய்வங்கள் வரை உள்ள அனைத்து உயிரினங்களையும் பரவசப்படுத்தி ஈர்க்கக் கூடிய தலை சிறந்த கலையே இவ் 'இசைக்கலை' ஆகும்.

இசைக்கலையானது ஒரு தெய்வீகக் கலையாகும். சிவன் கையில் டமருகத்தையும் (உடுக்கு), திருமால் கையில் சங்கினையும், சரஸ்வதி தேவி வீணையையும் கிருஷ்ணன் புல்லாங்குழலினையும், நந்திகேஸ்வரர் மத்தளத்தையும் இசைக்கும் தெய்வங்களாக நாம் அறிவதில் இருந்து இசை ஓர் 'தெய்வீகக்கலை' என்பது புலனாகின்றது. ஆலய சிற்பங்களிலும், கல்வெட்டுக்களிலும் இறைவன், இறைவிகள் இசைக்கருவிகளை ஏந்திய வண்ணம் உள்ளகாட்சிகளில் இருந்து படித்தோர் முதல் படிக்காத பாமரர்கள் வரை இசைக்கும் இறைவனுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இசைவடிவானவன் என்பது ஒரு முதுமொழி. 'ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே, 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்று அப்பர் பெருமான் இறைவனை எண்ணி உள்ளம் உருகப்பாடியும், 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்று சுந்தரரும், 'பண்ணென்ற இசைபாடும் அடியார்கள்' என்று சம்பந்தரும், 'நாதவிந்து கலாதி நமோ நம' என்று அருணகிரிநாதரும் பாடியதில் இருந்து இறைவன் இசைவடிவினன் என்பதையும், இராவணேஸ்வரன் ஹரஹரப்ரியா இராகத்தில் ஸாமகானம் வாசித்து இறைவனை மகிழ்வித்தான் என்பதில் இருந்தும், நந்திகேஸ்வரர் மத்தளம் வாசிக்க இறைவன் நடனம் ஆடினார் என்பதில் இருந்து இறைவன் இசைப்பிரியன் என்பதும் நன்கு புலப்படுகின்றது.

இவ்வாறு தெய்வீகத் தன்மை பொருந்திய இவ் மேன்மையான இசைக்கலையானது மனிதனையும் மற்றும் எல்லா உயிரினங்களையும், ஏன் இறைவனையுமே இசையவைக்கின்ற ஓர் அரும் சாதனம் என்று கூறினால் அது மிகையாகாது.

'இசையால் வசமாகா இதயம் எது'

**செல்வி.பரமலிங்கம் நிஷாந்தினி,**
கர்நாடக சங்கீத பாட ஆசிரியை,
BFA(music), PGDE.
தி/விபுலானந்தா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயி ராம்

# பாடசாலைக் கல்வியை முழுமையாக்கும் சத்ய சாயி ஆன்மீகக் கல்வி

மனித வாழ்க்கை இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று உடலைப்பேணி உயிர்வாழ்தல் (living) மற்றது மனிதன் சமுதாயத்தில் ஒரு அங்கமாக வாழ்தல் (life). இந்த இரண்டுக்கும் உதவவேண்டியதே கல்வியின் நோக்கமாகும். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா இதை 'Education is for life and not merely for living' என்று கூறுகிறார். நம்முடைய தற்போதய கல்வி முறைமை உடலைப்பேணி உயிர்வாழ உதவுவதே மட்டுமே முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். 'Struggle for existence and survival of the fittest' உயிர்வாழ்தல் என்ற போராட்டத்தில் தகுதியுடையவனே வாழ்கிறான் என்பது இந்த உலக நியதியாயிருக்கும் போது உயிர் வாழ உதவும் கல்வி அவசியம்தான். ஆனால் அதற்கு மட்டும் முக்கியத்துவம் தருவதனால் மனித ஆளுமை சீராக வளர்ச்சியடையாத காரணத்தால் மாணவர்கள் பல்வேறு எதிர்மறைத் தாக்கங்களுக்கு ஆளாகி நல்ல பிரஜைகளாக உருவாகும் வாய்ப்பை இழந்து விடுவதோடு சமுதாய அமைப்பும் சீர்குலைந்து போக ஏதுவாகிவிடுகிறது.

சமுதாய அமைப்பில் ஒரு பிள்ளை எப்படியிருக்க வேண்டுமென்று திருவள்ளுவர் எதிர்பார்ப்பதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்
மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன் தந்தை எந்நோற்றான் கொல் என்ற சொல்

என்று கூறுவதைப் பெற்றோரும் நாட்டின் வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் கல்வி நிலையங்களும் மாணவர்களும் கவனத்திற் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். ஏனென்றால் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பு இவர்கள் கையிலேயே உள்ளது.

பரிணாம வளர்ச்சியில் 84லட்சம் உயிரினங்களாகப் பிறந்துதான் நாம் இந்த மனிதப் பிறவியைப் பெற்றுள்ளோம் என்பது வேதாந்தமும் விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். இந்தப் பிறவிகள் தோறும் நாம் பெற்ற அனுபவங்கள் நம்மனத்தில் பதிவுகளாக இருப்பதால் மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகத்தன்மை, மனிதத்தன்மை, தெய்வத்தன்மை ஆகியவற்றின் கூட்டு என்கிறார் ஸ்ரீ சத்ய சாயி பாபா. மாணவர்கள் மிருகத் தன்மைகளிலிருந்து விடுபட்டு மனிதத் தன்மையோடு தன்னுள் இயல்பாகவுள்ள தெய்வத் தன்மையையும் வெளிக்கொண்டுவரக் கூடிய ஒரு கல்வித் திட்டமே இன்றைய தேவையாகும்.

நமது கல்வி முறைமையில் உள்ள இந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பது அவசரமும் அவசியமும் என்று கருதி அதற்கான ஒரு ஆன்மீகக் கல்வித்திட்டத்தை உருவாக்கி, பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை நாட்டின் பாடத்திட்டத்துடன் இணைந்த ஒரு முழுமையான கல்வி முறைமையை பிரசாந்தி நிலையத்திலும் 120 உலக நாடுகளிலும் இயங்கிவரும் சத்ய சாயி நிறுவனங்கள் மூலமும் உலகில் உள்ள 40க்கும் மேற்பட்ட சத்ய சாயி பாடசாலைகள் மூலமும் பல வருடங்களாக நடைமுறைச் சாத்தியமாக நிரூபித்துக் காட்டியுள்ளார். இந்த உலகில் சனாதன தர்மத்தை மீண்டும் நிலைபெறச் செய்ய அவதரித்த பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா.

சத்ய சாயி ஆன்மீகக் கல்வி பாடசாலைக் கல்வியோடு இணையும் போது கல்வி முழுமை பெறுகிறது. இந்தக் கல்வி முறையே பண்புள்ள கற்றவர்களை உருவாக்கவல்லது. பாடசாலைக் கல்வித்திட்டத்தில் உள்ள குறைபாட்டை, ஆசிரியர்கள் முன்மாதிரிகளாக இருப்பது ஓரளவு நிவர்த்தித்தாலும் மாணவரிடையே முழுமையான ஆளுமை அபிவிருத்தி ஏற்படுவது கடினமே. பாடசாலைக் கல்வியில் பெற்றோர் காட்டும் கரிசனையோடு ஆன்மீகக் கல்வியிலும் அக்கறை காட்டினால் முழுமையான கல்வி பெற்ற பிள்ளைகளாகத் தம் பிள்ளைகளை உருவாக்க முடியும்.

**T. குலவீரசிங்கம்,**
தலைவர். சத்ய சாயி நிலையம்'
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி – (கவிதை)

கத்துக்கடல் முத்தொதுக்கி ஓங்கார இசை ஒலிக்க
நித்தமும் மணியொலித்தே நிமிர்ந்த எம் சிவபூமி
பக்தர்கள் கைகூப்பி பரவசமாய் உருகி நிற்க
பரவசிவன் எட்டுத் திக்கும் காட்சி தரும்
பாரே எங்கள் பண்பு ஓடும் சிவபூமி

அள்ளும் நீர் அலையாய் மலை மோத
துள்ளும் மான் சிலையாய் கண் எறிய
மந்திகள் சிந்துபாடி மரமதைத் தாவி நிற்க
எந்தை எங்கள் கோணேசர் எங்கும் எழுந்தருளி
சிந்தையாம் எம்முன்னே வீற்றிருக்கும் சிவபூமி

காலணியைப் போட்டிடவே கால்கூசும் மண்ணதிலே
கழல் அணிந்த எம்பிரான் மாதுமையுடன் வீற்றிருக்க
தழல் வீசும் எம்பூமி தண்பதியாய் ஒளிர
திருநாவுக்கரசரும் சம்மந்தரும் பரவசமாய் பாடிநின்ற
தீரா துன்பங்கள் தீர்த்து வைக்கும் சிவபூமி

போர்த்துக்கேய படைகளும் சிதைத்த எம் ஆலயத்தில்
பக்தர்கள் சிலைகளை பதுக்கி வைத்தே காத்தெடுத்து
பார்த்தவர்கள் மெய் மறந்தே உருகி நிற்க
வித்தகர் எம் சைவர்கள் விருப்புடன் வேண்டியே
வடித்தெடுத்த வரமாக ஒளிரும் எங்கள் சிவபூமி

கோணமலையதிலே கோணநாதராய் என்றும் ஒளிவீச
கங்குவேலியில் கங்காதரனாய் அருள் மழை பொழிய
தம்பலகாமம் எனும் தண்பதியில் ஒளி தந்தே
விபுலானந்தர் கல்லூரியிலும் வித்தகாரய் இனிது அமர்ந்தே
வினை நாமுடிக்க பிணி பல தீர்ப்பான் சிவ பிரானே!

முத்தமிழ் விபுலானந்தர் காத்த சைவம் - எம்
சித்தம் மகிழ்ந்து என்றும் பக்தியாய் ஒளிர
விபுலானந்த கல்லூரி சிவ பரவசமாய் வியாபித்து நிற்க
ஆனந்த தாண்டவம் அருட்கடாட்சமாய் எங்கும் சிறக்க
சினமின்றி வளமான பணிதனை தொடர்வோம் நாமே

திருமதி. சர்மிலா துஷ்யந்தன்
ஆசிரியர்
தி/விபுலானந்தா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ பூமியில் தோன்றிய விபுலானந்த சிவன்

ஈழத்தமிழர்களின் வாழ்வியல் தொன்மையின் நிலைக்களனாக விளங்கிவரும் தென் கயிலை என்று போற்றப்படுகின்ற திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள நற்பதியாம் திருகோணமலையில் நிலத்தில் அடிக்கொரு லிங்கம் இருப்பதாக கருதப்படும் சிவபூமியில் அதனை மெய்ப்பிக்கும் முகமாக அண்மையில் திருகோணமலை நுழைவாயிலில் கம்பீரமாக புதுப்பொலிவுடன் விளங்கும் விபுலானந்தா கல்லூரி வளாகத்தில் சிவன் ஆலயமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இச்சிவாலயத்தின் தோற்றத்தினை நாம் சாதாரணமாக கடந்து செல்ல முடியாது. காரணம் அது தோன்றிய காலம், மற்றும் தோன்றியுள்ள இடம் என்பன இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இன்று திருகோணமலையின் தொன்மைக்கும் அதன் மரபுவழி இருப்புக்கும் பாரிய சவால் தோன்றியுள்ள இந்நிலையில், கன்னியாவில் இருந்து சுமார் 6 கிலோமீற்றர் தூரத்தில் அனுராதபுரச்சந்தி கண்டி வீதியில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி சுற்று வட்டாரத்தில் சுமார் 4 கிலோமீற்றருக்கு ஓர் சிவலாயம் இல்லாத குறையை இவ்வாலயம் இன்று தீர்த்துள்ள அதேவேளை, இக்கல்லூரியின் கல்விச்சமூகத்தின் நீண்டநாட்கனவும் நிறைவேறியுள்ளதுடன் பாலையூற்று, அன்புவழிபுரம், பாரதிபுரம், மிகிந்தபுரம், செல்வநாயகபுரம் லிங்கநகர் போன்ற கிராமங்களில் வாழும் மக்களின் ஆன்மீக தாகத்தினை நிறைவு செய்யுமிடமாகவும், சிவவழிபாட்டிடமாகவும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

'சுவாமி விபுலானந்தர் சிவாலயம்' என்ற நாமம் இதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும். காரணம் சுவாமி விபுலானந்தர் திருகோணமலையில் இராமகிருஸ்ணா இந்துக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய காலங்களில் திருகோணமலையில் பல ஆன்மீக சேவைகளை செய்தது மட்டுமன்றி கோணேசப்பெருமானுடன் நெருக்கமான ஆன்மீக உறவையும் வைத்திருந்தார் என்பது அவரது வரலாற்று பதிவாகும். சுவாமி அவர்கள் ஓர் சிவ பக்தன் என்பதாலும், அவரின் திருநாமத்தை கொண்ட கல்லூரியில் இவ்வாலயம் அமைந்ததாலும் இம்மண்ணில் அவர் ஆற்றிய சேவைக்கு மக்கள் செலுத்தும் நன்றிக்கடனாகவும் 'விபுலானந்த சிவாலயம்' எனும் நாமத்தை இவ்வாலயம் தாங்கியுள்ளது. மேலும் இக்கல்லூரி வளாகத்தில் ஆரம்பகாலத்தில் 2ம் உலக போர்க்காலத்தில் ஏதிலிகளின் தங்குமிடமாகவும், உணவளிக்கும் இடமாகவும் இக் கல்லூரி பணியாற்றியுள்ளது. வெள்ளம் ஏற்பட்ட வேளையில் மக்களுக்கு கஞ்சி காய்ச்சிக் கொடுத்து தானம் வழங்கியதால் 'கஞ்சிமடம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காரணப்பெயரையும் தாங்கிய இப்பாடசாலை சாலையோரத்தில் அமைந்துள்ள மற்றுமொரு காரணத்தினால் கதிர்காம அடியார்களுக்கும் ஏனைய ஆன்மீக யாத்திரிகர்களுக்கும் அன்னதானம் வழங்கும் அரிய தொண்டினையும் மேற்கொள்கின்றமை மற்றுமொரு வரலாற்று பதிவாகும்.

ஆலயம் ஒன்றை ஸ்தாபிப்பது சாதாரணகாரியம் அல்ல. அது ஒரு தவமும், வரமும் ஆகும். அத் தவத்தினை ஆற்றும் கைங்கரியத்தில் ஈடுபட்ட பெருமை எமது அதிபரையே சாரும். சர்வமத சமரச போக்கினை நாளும் தன் வாழ்வில் நிலை நாட்டும் பண்பு கொண்ட திரு.ஆர்.ஜெறோம் (அதிபர்) அவரது அரிய முயற்சியே இச் செயலாகும். இதற்கு ஆதாரமாக எல்லாம் வல்ல இறைவனது வரமும், எமது கல்லூரியின் இந்து மாமன்றத்தின் தலைவர் திரு.குமாரசாமி நளினகாந்தன் அவர்களினது அயராத முயற்சியும், பிரதி அதிபர்கள், ஏனைய ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்களினதும் மனமார்ந்த ஒத்துழைப்புமே இத் தவத்தினை சிறப்புற நிறைவேற்றி ஒரு சிவாலயமாக பரிணமிக்கச் செய்துள்ளது. இவை யாவும் சித்திக்கச் செய்தது சிவனது செயலன்றி வேறில்லை என்பது நம் அனைவரதும் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இவ் ஆலயம் 2019.01.21 அன்று தைப்பூச நன்னாளில் அடிக்கல் நாட்டப்பட்டு, விகாரி வருடம் ஆனி உத்தரம் அன்று எமது திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பிரதம குருபிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரகுருக்கள் அவர்களினால் குடமுழுக்கு செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று வருவதோடு, எதிர்வரும் ஆடி மாதம் 29ம் திகதி சங்காபிஷேகமும், பிரதோஷ சிறப்பு பூசைகளும் நடைபெற திருவருள் கூடியுள்ளமை எல்லாம் வல்ல மாதுமை சமேத கோணசப்பெருமானின் திருவருளாகும்.

இவ் ஆலயம் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் வாழ்வியலில் மாற்றத்தை மேற்கொள்ளும் தர்ம ஸ்தாபனமாக விபுலானந்தரின் அடியொற்றி சேவையாற்ற வேண்டும் என பிரார்த்திப்பதோடு, அனைத்து நல்லுள்ளங்களும் இவ் ஆலயத்தின் பங்காளராக மாறவேண்டும் என எதிர் பார்ப்பதோடு கோயிலை பேணிப் பாதுகாத்து நிலைபெறச் செய்வது இப் பிரதேச வாழ் மக்களது கரங்களிலே தங்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி. காயத்திரி நளினகாந்தன்**
ஆசிரியர்
விபுலானந்தா கல்லூரி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVALAYAM IN OUR SCHOOL HISTORY

After the $2^{nd}$ world war, since 1947 our school began as 'kanjimadam school' at the Anuradhapura junction, welcoming the native of Srilanka as the gate of the Trincomalee and now it is proudly reached "1AB 1000 college". Our school has historical backround for its name because servaral years ago it had been started to issue kanji to the affected children from the various community. And thus it's called as kanjimadam school.

During the ethnic war and the conflict situations our school eventually commited to welcome all the pupils from the different community religion as well as the ethnic group and thaught good value to them to be a good citizen of srilanka.

Including Mr.V. Kathirithambi who was the founder of our school. There are 22 principals devotedly rendering their selfless service to develop this school. Each of them have plant every mile stone by their countless service. There fore we are at the moment remembering their nemes with heart felt thanks.

The teachers, non-acadamic staffs and the officials of the educational sector give their countless support, time to time for upgrading of our school. At the moment we also sincerely remember them too.

At present the improved human resoureses of more than 50 teachers and 12 non-acadamic staffs has been engaged with education learning activities. As well as the co-carricular activities. For the better improvement and succeses of 1000 number of students. And the school community also give their hand on time for the development of our school activities.

Our school has various socities and clubs for the learning improvement of the students with their fullest involvement of such, they gaind physical and moral value thoughts.

Namely, very recently that Hindu socity was reconstructed, for the purpose for devotional worship of Hindu pupils statues of Vinayaga & Saraswathy was traditionaly established in different places by the help of school community, hindu mamandram and our honourable principal Mr.R.Jerome and it was guided by Mr.Nalinakanthan. Then is the name of our school "VIPULANANDA SIVALAYAM" has constructed at the school for the gathering to the hindu students in a one place. We hope it should be an foundation for the religious and devotional life of the students in future.

-Thank you-

U.Celestine Tharunikaa (12 arts)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை எழில் பாடல்

தென்கையிலைத் திருக்கோணஸ்வரம்
திருக்கோணமலையின் திருமுடியே
மங்காப்புகழுடை வரலாறு
கொண்டு விளங்குது கோணமலை

(தென்)

இயற்கை எழில் வளம் நிறைந்திருக்க
இன்புறு காட்சிகள் மலர்ந்திருக்க
இயற்கைத் துறை முகம் வரவேற்கும்
இனிய வெந்நீருற்று இதமளிக்கும்
புல் மோட்டைக்கனி வளம் பொன்வளமே
புறாமலை கண்டாலே புதுமணமே

(தென்)

சங்கமாகுது மகாவலி இங்கே
சரித்திரம் சொல்வது கந்தளாயக் குளம்
முத்து விளையும் கடலுண்டு
முத்தூர் என்ற ஊரும் வெட்டு
அழியாச் சின்னம் கொண்டமலை என்போமே

(தென்)

இலக்கியம் வகுத்த அகத்தியனும்
இந்நகர் வந்து சேர்ந்து மல்லோ
ஆகஸ் திய ஸ்தாபனம் அமைத்தாரே
ஆயுள் சித்த வைத்தியம் செய்தார்
திருஞான சம்பந்தன் தேவாரம் திருகோணமலையின் புகழராம்

(தென்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச நிலமும் உள்ள மலை
பலமத வழிபாடுள்ள மலை
பாவேந்தன் இராவணன் ஆண்ட பூமி
பாரதம் போற்றும் கோணமலை
குளக் கோட்டன் பணி செய்த கோணமலை
குறைவிலா வளங்கள் கொண்டமலை

(தென்)

கிழக்கு மாகாண சபை இங்கு
ஈழத்தின் தலை நகர் இது வல்லோ
உயிர் பனி மலைகள் இங்கு உண்டு
உயிர் கல்வி நிறுவனம் இங்கு உண்டு
வளம் நிறைந்த வாழ் பூமி
வந்தாரை வர வேற்கும் வளர் பூமி
வாழிய வாழிய வாழிய வாழிய வாழிய வாழியவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மலருக்கானது

**உயர்ந்தவன்**

விசய சுகங்களில் வேட்கை கொள்ளாதவன், அதிக உணவில் நாட்டமில்லாதவன், கடமைகளை நிறைவேற்றுவதில் கவனம் கொள்பவன், அடுத்தவரிடம் உரையாடும் போது நாவை அடக்குபவன், நல்லவன் உறவை விரும்புபவன், தன் குற்றங்களை வெளிப்படுத்த தயங்காதவன் மேலானவரிடம் பேசி பழகி தன் தவறை திருத்திக் கொள்ளத் தயாராயிருப்பவன்.

**ஆசௌசம் நியமம்**

அந்தணர்களுக்கு பத்து நாட்களிலும்
ஷத்திரியர்களுக்கு பன்னிரண்டு நாட்களிலும்
வைஷ்யர்களுக்கு பதினைந்து நாட்களிலும்
ஏனையோருக்கு 31நாளிலும் துடக்கு நீங்குகிறது

**சிரார்த்தத்துக்கு உரிய பொருட்கள்**

எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய்,பசும்பால், பசுந்தயிர், எண்ணெய், சீகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், தேங்காய், இளநீர், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், முல்லையிலை, முசுட்டை இலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

**நாகதோஷம் நீங்க**

வெள்ளிக்கிழமை நாளில் ராகு காலத்தில் பைரவருக்கு பாலாபிஷேகம் செய்து புனுகுபூசி, நாகலிங்கப்பூமாலை அணிவித்து பால்சாதம், பால்பாயாசம் நைவேத்தியமாகப் படைத்து அர்ச்சனை செய்தால் நாகதோஷம் நீங்கும். (அருகே உள்ள பாம்புப்புற்றில் முட்டையின் மேற்பகுதியை லேசாக உடைத்து வைக்கவேண்டும்.)

**கோபத்தின் கொடுமை**

கோபத்தினால் மிகுந்த அறியாமை தோன்றும். அறியாமையால் நினைவு தடுமாறும். நினைவு தடுமாறுவதால் விவேகம் வீழ்ச்சியடையும். விவேகத்தின் வீழ்ச்சியால் மனிதன் தன்னிலையில் இருந்து தாழ்ந்து போகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜெபம் செய்யும் முறை**

ஜெபத்தை வாசிகம், உமாம்சு, மானசம் என்ற மூன்று முறையில் செய்யலாம்.

வாசிகம் - அடுத்தவர் காதில் விழும்படி ஜெபிப்பது
உமாம்சு - தனது காதில் மட்டும் விழும்படி ஜெபிப்பது
மானசம் - மனதினால் மட்டும் ஜெபிப்பது

இதில் வாசிகம் பல மடங்கு பயனளிக்கும்
உமாம்சு - நூறு மடங்கு பயனளிக்கும்
மானசம் - ஆயிரம் மடங்கு பயனளிக்கும்

மேலும் ஜெபம் செய்யும் போது மனம் ஒருநிலைப்படல் வேண்டும். ஜெபம் செய்யும் சமயம் மனமகிழ்வாயும், சுத்தமாயும், மௌனமாயும், மந்திர அர்த்தத்தை நினைத்து மற்றக் கவலைகளை எண்ணாமலும் மன சமாதானத்துடனும் இருக்க வேண்டும்.

**புஷ்பம்**

தாமரை - ஐந்து நாளும் சாற்றலாம்
அரளியை - மூன்று நாள் சாற்றலாம்
கிராந்தியை - மூன்று நாள் சாற்றலாம்
சண்பகம் - ஒரு நாள் சாற்றலாம்
துளசியை - மூன்று மாதமும்
வில்வத்தை - ஆறு மாதமும்
விளாமிச்சை - எப்போதும் சாற்றலாம்

**ஐந்து மரங்கள்**

பாற்கடலில் அமுதத்துடன் பிறந்த ஐந்து தருக்கள்.
1.கற்பகம் 2. அரிச்சந்தனம் 3. பாரிஜாதம்
4. மந்தாரம் 5. சந்தானம்

**நம்பிக்கை ஒன்றுதான் மனிதனுக்கு நல்ல பாதுகாப்பு துன்பத்தின் மூலமே தூய்மை அடைவது என்பது மனிதர் யாவருக்கும் ஏற்பட்ட பொது விதி.**

**திருமதி. ம. இராமச்சந்திரன்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணமலை அமைந்த விபுலானந்த சிவாலயம்

ஈசன் உறை கோயிலெழில் கோணமலை
தேசம் புகழ் கோடியருள் காணும் மலை
பாகன் உமை திருக்கோல காட்சி மலை
பாலன் திருஞானசம்பந்தன் பாடிய மலை...

நூற்றாண்டு ஏழிலெழுதிய தேவாரப் பதிகமலை
நூறாயிரமாண்டு கடந்தும் சோழகங்கன் போற்றும்மலை
நாவாறப்பாடித் தொழும் கோணேசர்மலை
நாலினமும் கூடி வாழும் கோகர்ணமலை அது எங்கள் மலை...

புண்ணிய தீர்த்தமாய் பெருகிவரும் பாவநாசமலை
புனித சித்தர்கள் வாழ்ந்தருளிய அவதாரமலை
புள்ளி மானினங்கள் துள்ளியோட மயிலாடும் பசுமை மலை
எள்ளிநகையாடும் மந்திகள் தாவுகின்ற சோலைமலை எங்கள்மலை...

சாமகானம் இசைத்த இராவணனுக்காக அசைந்தமலை
சரிபாதி மாதுமையாள் அர்த்தநாதீஸ்வரராய் இணைந்தமலை
கொன்றைமலர் சூடிய கோணநாதரிடம் வாசமுல்லை வீசும்மலை
நன்றேபுகழ் பாடிவணங்கிட பேசும்மலை எங்கள்மலை...

வயல்நிலங்கள் செழிப்பாக்கி வேள்விமுறை தோற்றுவிக்கும்மலை
வெய்யில்மழை தருவித்து மெய்யுற்று காணும்மலை
கன்னியாவெந்நீர் ஊற்றினை இராவணன் உண்டாக்கியமலை
கண்ணியத்தமிழ் பைங்கலைகளைப் பயின்றிட தோற்றுவித்தமலை
எங்கள்மலை...

கட்டுக்குளதிருமலை கொட்டியார தம்பலகாமம் பற்றுக்களானமலை
கலைமகள் வாசிக்கும் வீணையிசைப்போல் ஒலிக்கும்மலை
அலைகடல் நீந்திச்சூழ்ந்து கைகூப்பித்தொழும் கோணமலை
கலாசாரத்தைத் துடிப்புடன் பேணுவதை எச்சமயமும் வந்து பார்க்கும்மலை
எங்கள்மலை...

அருணகிரிநாதர் சுந்தரமுருகனின் புகழ் பாடியமலை
சுந்தரமூர்த்திநாயனார் கோணேசர் துதிப்பாடி அழைத்தமலை
தித்திக்கும் பக்திப்பாக்களை பண்டிதர்வடிவேலரைப் பாடவைத்தமலை
திருக்காளாத்தி அவதரிக்க சண்முகராஜா தொண்டுகளாற்றி சஞ்சரிக்கும்மலை
எங்கள்மலை...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெங்காதரனந்த சுவாமிஜிக்கு முக்திப்பேறு அருளியமலை
அமெரிக்கதேசம் கடந்துவந்த தந்திரதேவாவை ஆட்கொண்டமலை
மாந்தர்களின் மாணிக்கமாய் சரஸ்வதிமாதாஜியைத் தந்தமலை
சாதுஅப்பாத்துரை செட்டியை தர்மபிரபுவாக ஆக்கியமலை எங்கள்மலை...

எங்கள் காந்திஜயா ஆனந்தமாய் சமூகப்பணி ஆற்றியமலை
விபுலானந்த அடிகள் விரும்பி வணங்கியமலை
வீறுகொண்டு விபுலானந்தா சிவாலயம் தோன்றவைத்தமலை
தொண்மைகள் பேசி தொண்டாற்றும் எங்கள் தென்கையிலை எனும் திருகோணமலை.

**பாலகிருஷ்ணன் ஹம்சபாலன்**
(கவிஞர். திருமலை பா.ஹம்சன்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக மறுமலர்ச்சிக்கு பெண்களின் பங்கு

இன்றைய சமுதாயத்தில் அமைதியும் சாந்தியும் குறைந்து வருவதற்கு ஆன்மீக விழிப்புணர்ச்சி இன்மையே முக்கிய காரணமாகும். இந்த ஆன்மீக மறு மலர்ச்சியை உருவாக்குவதில் மகளிரே முக்கிய பங்காற்ற வேண்டும்.

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள், ஆசிரியைகள் தம் அன்றாட வாழ்க்கையில் ஆன்மீகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து சமுதாய முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென மகாகவி பாரதியார், சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர் போன்றோர் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளனர்.

இந்த வகையில் இன்றைய காலகட்டத்து மாணவிகளும் ஆசிரியைகளும் தற்போதய சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் அவலங்களை அழித்தொழிக்கப் பாடுபடவேண்டும் இதற்கு அவர்களுக்கு ஆன்மீகப் பலம் அடிப்படையில் அமைய வேண்டும். எனவே விபுலானந்தா சிவன் ஆலயம் இவர்களுக்குத் தேவையான ஆன்மீகப் பலத்தை வழங்குவதற்கு என்றும் அருள்பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு இவ்வாலயத்தை நிர்மாணிக்க உதவிய அனைவரையும் ஆண்டவன் அருள் செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

இந்த தலைமுறை மாத்திரமல்ல அடுத்த தலைமுறையையும் காப்பாற்றுவதற்காக நல்ல திட்டமிட்ட முறையில் கல்வி அளிக்கப்பட வேண்டும். தங்களுக்குள் பாரிய பொறுப்புக்களைத் தாங்கும் பொருட்டு அவர்களது அறிவுத் திறனும் மனோ பலமும் திட நம்பிக்கையும் பெற்றிருக்க வேண்டும்.

இன்று கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகள், நாளைய தாய்மார்கள். ஆகவே தங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய பண்பு, படிப்பு, அறிவு ஆகிய அனைத்திலும் தங்களைத் தயார்படுத்தி வைத்திருக்க வேண்டும்.


இன்றைய பெண்களின் தன்னிச்சையான போக்கினால் தர்மம் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கற்ற கல்வியை விவேகத்தோடு நற்செயல்களில் ஈடுபட வேண்டும். நற்பண்புகளை வளர்த்தும் கொள்ளவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த பெண்கள் தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கும் சமுதாயத்திற்கும் தம்முடைய சக்தி, திறமை, நோக்கம், விருப்பம், மனபோக்கு, இயல்பு வாழ்க்கை, வசதி, ஒழுக்கம், பாண்டித்தியம் போன்றவற்றிற்கு ஏற்ப தம்மேல் மாசுபடாமல் முடிந்த அளவு சேவை செய்யவேண்டும் இதற்கு ஆன்மீகப் பலமே தேவை

**சத்தியா- புவனேந்திரன்**
சாயி இல்லம்
*105* கந்தசாமி கோயில் வீதி
திருக்கோணமலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைத்தவனே அருள்க

அன்பு கொண்டு வாழ்ந்து நித்தம்
அளவுடனே பேசி எங்கும்
உண்மையாக உலவி உற்ற
உறவினரை மதித்து
எண்ணம் யாவும் உயர்வாய் வாழ்வில்
ஏற்றம் பெற்று மனதில்
நன்மை கூடி களிக்க எங்கள்
நாயகனே அருள்க.

உயிரை வாட்டி வதைக்கும் பிறர்
உதாசீன உரையும்
வயது பாரா நகைப்பும் நன்கு
வளர்த்த நேசர் மறப்பும்
நயமாய் காண கிடைக்கும் இந்த
நடிக வாழ்வை விடுத்து நாம்
வியக்கும் விரும்பும் உலகை
வழங்கி ஈசர் அருள்க.

உள்ளவற்றை ஒழித்து அவை
உருக்குலைந்து போக வயிறு
கொள்ள உண்டு சுகத்தை
காணாதவர்கள் இங்கே
இல்லார்க்கு ஈந்து அதில்
இன்பத்தை காணா இந்த
பொல்லார்கள் கொடுக்க நன்றே
படைத்தவனே அருள்க.

நாங்கள் மட்டுமே எல்லாம்
நமக்கே என்று சேர்த்து
தேங்க வைத்து செத்தார் சொத்து
தேடாமலேயே சென்றார்
ஏங்கி நிற்பார் இன்னும்
எண்ணவில்லை சேர்ப்பார் எம்மை
தாங்கியுள்ள இறையே அவர்கள்
தன்னல மறக்க அருள்க.

திருமதி. எஸ். நடேசபவானந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையும் ஆன்மீகமும்

இயற்கையின் படைப்புகள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை. உருவ அமைப்பில் நூறு விழுக்காடு ஒன்றுபோல் இன்னொன்று பிரபஞ்சத்தில் கிடையாது. மரமொன்றின் ஒவ்வொரு இலையும் தனித்துவமானது. ஒரு இலைபோல் இன்னொன்று இல்லை. படைப்பின் அற்புதமும் அதுதான். தனித்துவம் என்பது 'எது எதுவோ அது அதுவாக இருப்பது'. ஒப்பீட்டிற்கோ அல்லது மதிப்பீட்டிற்கோ வாய்ப்பளிக்காதது.

உயிரினங்களில் மனிதனைத் தவிர்ந்த அனைத்தும் இயற்கையுடன் முழுமையாக இணைந்து உணர்வால் வாழ்கின்றன. மனிதனுக்கு 'மனம்' இருப்பதால் உணர்வாலும் அறிவாலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அறிவு மூளையால் சேகரிக்கப்படும் தகவல்களின் வெளிப்பாடு ஒருவரால் சேகரிக்கப்படும் தகவல்களின் தன்மையைப் பொறுத்து அவரது அறிவு சார்ந்த வாழ்தல் அமைகின்றது.

அறிவும் உணர்வும் தனித்தனியானவை. ஒன்று செயற்படும்போது மற்றையது செயல்படுவதில்லை. நாம் அறிவால் வாழும் ஒவ்வொரு கணமும் உணர்வு ரீதியான வாழ்தல் சாத்தியமற்றதாகிவிடுகிறது. அதேபோன்று உணர்வால் வாழும் ஒவ்வொரு கணமும் அறிவு சார்ந்த வாழ்தல் இடம்பெறுவதில்லை.

நமது வாழ்தலின் ஆரம்பமானது உணர்வு ரீதியாகவே ஆரம்பமாகின்றது. இயற்கையோடு உணர்வு ரீதியாக முழுமையாக இணைந்து இருப்பதனாலயே ஒரு குழந்தை தெய்வீகம் நிறைந்ததாகக் காட்சியளிக்கின்றது. காலப்போக்கில் வெளிப்புறத் தகவல்களில் அதாவது அறிவின் சேகரிப்பு அதிகரிக்க அதிகரிக்க உணர்வு சார்ந்த வாழ்க்கையிலிருந்து அறிவு சார்ந்த வாழ்க்கைக்கு நகர்வதோடு இயற்கையிலிருந்தும் அதன் அற்புதங்களில் இருந்தும் விலகிச் செல்லத் தொடங்குகிறது.

இயற்கையின் அற்புதங்களில் உச்சமானது 'தனித்துவம்'. அறிவின் ஆதிக்கம் அதிகரிக்க நமது தனித்துவத்தை உணர்வதற்குத் தவறிவிடுகிறோம். எமது தனித்துவத்தை நாம் உணராதவரை மற்றவர்களது தனித்துவத்தையும் புரிந்துகொள்ள முடிவதில்லை. இதன் விளைவாகவே போட்டி, பொறாமை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பு, அகங்காரம், அதிகாரம் போன்ற மனித ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கும் விடயங்களில் ஈடுபடுகின்றோம்.

ஒவ்வொரு மனிதரும் தனித்துவமானவர். ஒவ்வொருவரது மனமும் தனித்தன்மை கொண்டது. இயற்கையின் படைப்பில் ஏற்றத்தாழ்வு என்று எதுவுமே இல்லை உணர்வால் நாம் அனைவரும் ஒன்று. ஆனால் அறிவால் மனத்தால் நாம் வேறுபடுகின்றோம். பெற்றோரின் வளர்ப்பு முறையும் சமூகம் மற்றும் சமுதாய அமைப்புக்களின் செல்வாக்குகளும் அவற்றை உள்வாங்கும் இயல்பும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக அமைவதனால் ஒவ்வொருவரது அறிவும் அது சார்ந்த மனமும் வெவ்வேறானதாக அமைகின்றது.

ஆளுமையின் பலமானது அறிவும் அதிகாரமும் சார்ந்ததல்ல. கல்விமுறை, பொருளாதார, வர்த்தகக் கட்டமைப்புக்கள், சட்டம் மற்றும் அரசியல் சார்ந்த வரைபுகள் போன்றவை பதவிகள் மற்றும் அடையாளங்களை உருவாக்குவதே ஆளுமையானது அறிவும் அதிகாரமும் சார்ந்ததான தோற்றப்பாட்டை உருவாக்குகின்றது. இதனால் தலைமைத்துவம் என்பது அறிவும் அதிகாரமும் கொண்டதாக வடிவமைக்கப்படுகின்றது. ஆனால் ஆளுமையின் தலைமைத்துவத்தின் ஒட்டுமொத்தப் பலமும் வேறொன்றாக இருக்கின்றது.

மனித மனங்களைப் புரிந்து கொள்வதோ அல்லது ஒன்றிணைப்பதோ சாத்தியமற்றது. ஏனெனில் அது அறிவு சார்ந்தது. ஆளுமையின் தலைமைத்துவத்தின் ஒட்டுமொத்தப் பலமும் புரிந்துணர்வு சார்ந்ததாகவே உள்ளது. புரிந்துணர்வே ஆளுமையின் ஆணிவேர். புரிந்துணர்வு என்பது தன்னைத்தானே புரிந்து கொள்ளும்போது பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்திருப்பது தெய்வீகம் என்பது தெளிவாகும். ஒன்றோடு அனைத்தையும் உணர்வு ரீதியாகத் தொடர்புபடுத்தும் அற்புத சக்தியான தெய்வீக உணர்வே ஆன்மீகத்தின் அடித்தளமும் ஆளுமையின் ஆணிவேருமாகும்.

**கேஜி மாஸ்டர்**
நூலாசிரியர்
வெற்றித் திறவுகோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயச் சிறப்பு

மனிதனை மனிதனாக வாழவைப்பது சமயமாகும். மனிதனாக வாழ்வதற்கான வகையில் இந்து சமயத்தில் அனைத்து விடயங்களும் கூறப்பட்டுள்ளன. இவற்றைக் கடைப்பிடித்து வாழ்வது சிறப்பைத் தரும். ஆனால் இன்றைய சமூகச் சூழலில் வாழ்வது இலகுவானதும் சிக்கலானதும் ஆகும். இச் சிக்கலான விடயங்களை இலகு படுத்துவதற்கு நாம் மாசுக்களை அகற்ற வேண்டும். அதில் ஒன்று தான் ஆலயம் அமையப்பெற்றமை. வருங்கால எமது இளைய சமுதாயம் கதையாகவே சமய விடயங்களை அறியவேண்டிய வகையில் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். ஆனால் இங்கு நாம் வாழும் சூழல் அப்படியல்ல இளைய எதிர்கால சமூகத்துக்கு கவனமாக வழிகாட்டப் படவேண்டிய தேவையுள்ளது.

எமது சமயத்தில் மிக மிக எளிதாக வாழ்க்கையின் அனைத்து விடயங்களும் வாழ்ந்தவர்களாலே வழிகாட்டப்பட்டுள்ளன. இலக்கியங்களும் உறுதியாகவே உள்ளன. அதனை ஏற்று அவ்வழியில் வாழ்வதற்கு நாம் தடம் மாறி வாழ்பவர்களாக உள்ளோம். அதனாலே தான் அழிவுகளும், நோய்களும். என்றோ கூறிய விடயங்களை மூடநம்பிக்கை என்று ஒதுக்கிவைத்து அழிவுகளையும், நோய்களையும் உள்வாங்கியுள்ளது இன்றைய சமூகம். பொதுமறை, இருமறை, இலக்கியங்கள் தெளிவாகவே வாழ்வின் இரகசியங்களை எல்லாம் தெளிவுபடுத்துகின்றன.

புராணக்கதைகள் என்பது வாழ்வை வளப்படுத்துவன. அதனை தமக்குகந்த வகையில் கடைப்பிடித்து ஏற்று நடப்பது நம் ஒவ்வொருவரும் முழுமைபெற உதவும். ஆலய வழிபாடு, உருவ வழிபாடு, கிரியை வழிபாடு எல்லாம் அர்த்தமுள்ளது. அவ் அர்த்தங்களை ஒவ்வொரு இந்துவும் புரிந்து கொள்ள வேண்டும்.

சிவ தத்துவங்களை உள்வாங்கியே பல வழிபாட்டு பிரிவுகள் உள்ளன. அயனும் மாலும் பெற்ற இறை இன்பத்தை நாமும் பெறலாம். அதற்கு மாணவப்பருவம் முதல் சிறந்த ஒழுக்கசீலர்களாக மாறுவதே தகுதியாகும். இத்தகுதியை வளர்த்துக் கொள்ளவே உறவு முறையில் நாம் இறைவனை தாயாக தந்தையாக நம்பிக்கை வைத்து வழிபடுவதாகும். இதனையே நாயன்மார்கள் வாழ்ந்து காட்டினர். எமது சமயத்தின்படி யுகங்கள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் யுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியானது. அதன் கடைசிப் பகுதியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

மீண்டும் புதியதொரு யுகத்தை நோக்கியே இயற்கை செல்கின்றது. பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் முக்திக்குரிய சாதனைகளை கடைப்பிடித்து முடிவான பிறப்பிறப்பற்ற நிலைக்கு செல்ல வேண்டும்.

நல்ல சிந்தனை மனிதனை வாழவைக்கும்.இவ் ஆலயம் அமையப் பெற்றது. அனைவரினதும் கூட்டு எண்ணங்களால் ஆகும். இதனையே எமது சமயத்தில் கூட்டு வழிபாடாக நல்ல விடயங்களில் நாம் இணைந்து துதிக்கின்ற போது அது விரைவில் செயல் உருவாக்கம் பெறுகிறது. இத்தகைய பொது வழிப்பாட்டுச் சிந்தனைகள் மாணவர்கள் மத்தியில் மேலும் வளர்க்க வேண்டும்.

இறைவனுடைய பார்வை உடைய தலமாகவே விபுலானந்த சிவாலயம் அமைந்துள்ளது. அதனை மேலோங்கச் செய்வது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**திரு. விக்னேஸ்வரன்,**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்தா சிவாலய கட்டிடநிதிக்காக பணஉதவி செய்த அன்பர்கள் விபரம்

| இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | கம்ஷா கென்ஸ்ரக்ஷன் | 5000 |
| 2 | திருமதி.கோ தமிழ்நாதன் | 2000 |
| 3 | அமரர்.இ.பரமலிங்கம் (ப நிஷாந்தினி) | 5000 |
| 4 | தீருமதி.அ. காந்தீபன் ஆசிரியர் | 8500 |
| 5 | திரு.வினோத் | 25000 |
| 6 | திரு.துஷியந்தன் | 15000 |
| 7 | திரு.ந.கணேஷ் | 5000 |
| 8 | திரு.மைக்கல் | 10000 |
| 9 | செல்வி மதிவதனி மாணவி | 3000 |
| 10 | செல்வி.கஜந்தனா சுரெந்தினி | 1000 |
| 11 | தர்ஷனா பிரேமினி ஆசிரியர் | 10000 |
| 12 | திரு.வசந்தராஜா ஆசிரியர் | 5000 |
| 13 | திரு.நவதீபன் | 8000 |
| 14 | திரு க.சௌந்தராஜர் | 1000 |
| 15 | திருமதி ருத்ராகாந்தன் ஆசிரியர் | 8000 |
| 16 | திரு.சுதாகரன் AD | 5000 |
| 17 | திரு.கந்தசாமி | 2000 |
| 18 | திருமதி பழனிச்செல்வம் ஆசிரியர் | 2000 |
| 19 | திருமதி சிவசோதி ஆசிரியர் | 3000 |
| 20 | திரு ஆனந்தராஜா ஆசிரியர் | 5000 |
| 21 | திருமதி மாதங்கி ஆசிரியர் | 5000 |
| 22 | திருமதி கிருபாளினி ஆசிரியர் | 11000 |
| 23 | திரு.ச லோகேந்திரன் | 2000 |
| 24 | கலைமகள் தமிழ் மகாவித்தியாலயம் | 3600 |
| 25 | செல்வ நாயகம் இடது மகாவித்தியாலயம் | 2900 |
| 26 | திரு ர ஜெரோம் அதிபர் | 5000 |
| 27 | திருமதி ஜு வரேந்திரராஜா | 4000 |
| 28 | திரு கொ அருளேந்திரன் | 5000 |
| 29 | திருமதி ம உதயரட்ணம் | 7000 |
| 30 | திருமதி ப ஸ்ரீதரன் | 10000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 31 | திருமதி ஜெ முத்துமாரி | 5000 |
| 32 | திருமதி வ ரட்ணராஜா | 2000 |
| 33 | திருமதி ஜெ மதிவதனி | 2000 |
| 34 | திருமதி அருள்நேசன் | 11000 |
| 35 | செல்வி ச பராசக்தி | 5000 |
| 36 | திருமதி அ கணேஸ்ராஜ் | 10000 |
| 37 | திருமதி ம ராதிகா | 2000 |
| 38 | திரு. கு. நளினகாந்தன் | 5000 |
| 39 | திருமதி ந காயத்திரி | 4000 |
| 40 | திரு ப பிரதுபன் | 5000 |
| 41 | திரு த கோபி | 5000 |
| 42 | திரு ச விமலானந்தம் | 5000 |
| 43 | திருமதி ச நடேசபவானச்தம் | 2000 |
| 44 | திருமதி ர சிவச்செல்வி | 5000 |
| 45 | திருமதி அ ரஜுந்திரன் | 3000 |
| 46 | திரு ஜெ ரமேஸ் | 10000 |
| 47 | திரு ச காளிராஜா | 1000 |
| 48 | திருமதி பிருந்தா | 2000 |
| 49 | செல்வி ச யசோதினி | 2000 |
| 50 | செல்வி க பிரியதர்ஷினி | 2500 |
| 51 | செல்வி ந அனுஷியா | 3000 |
| 52 | திருமதி க சத்தியநாதன் | 2000 |
| 53 | செல்வி ம ஜெயஸ்ரீ | 1000 |
| 54 | திருமதி ர மகேந்திரராணி | 1500 |
| 55 | திருமதி அ ஜகைன் | 2000 |
| 57 | திருமதி ஜெ சுதர்ஷினி | 2000 |
| 58 | திருமதி ப பிரபாகரன் | 1500 |
| 59 | திரு க ரவிகாந்தன் | 4000 |
| 60 | திருமதி ப கோகுலச்செல்வன் | 2500 |
| 61 | திருமதி ல யேகெரட்ணம் | 2000 |
| 62 | திரு ஐ கங்காதரன் | 2500 |
| 63 | திருமதி கெ சதானந்தம் | 2000 |
| 64 | திருமதி ப கேதுஸ்வரன் | 2500 |
| 65 | திருமதி ப ஜெயபாரதிதாசன் | 500 |
| 66 | ஸ்ரீ வாணி வித்தியாலயம் | 1700 |
| 67 | திரு தெய்வேந்திர ராஜா | 2000 |
| 68 | திரு கிருபாகரன் | 5000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்திற்கு நன்கொடை நல்கிய அன்பர்கள்

திருக்கோணமலை பல் நோக்கு கூட்டுறவுச் சங்கம் - ரூ 10,000.00

## அன்புவழிபுர அன்பர்கள்

| | |
|---|---|
| க.சியாதா | 500 |
| இ.சிவனேஸ்வரி | 500 |
| கண்ணம்மா | 500 |
| கவின் | 500 |
| ம.அன்னபூரணம் | 500 |
| சுசிலாதேவி | 500 |
| ப.சதீஸ் | 1000 |
| மாலா | 500 |
| ப.பவித்திரா | 1000 |
| ம.விக்னேஸ்வரன் | 500 |
| ர.குமுதினி | 500 |
| ச.ராசையா | 500 |
| பிரியந்தினி | 1000 |
| இ.ஜீவன் | 500 |
| நி.ஜெயராணி | 500 |
| ச.விஜயகுமார் | 1000 |
| சுரேஸ் | 500 |
| ஜெகராஜா | 500 |
| கௌரி | 1000 |
| ம.விதுஷன் | 500 |
| கிஷோபன் | 500 |
| ராமசந்திரன் | 500 |
| ச.சசிதரன் | 500 |
| த.சுபாகரன் | 500 |
| ச.விஜயதாசன் | 600 |
| காண்டீபன் | 500 |
| மணிவண்ணன் | 500 |
| வ.வர்நேந்திரன் | 500 |
| சுமதி | 500 |
| அமுதினி | 1000 |
| பவானந்தசிங்கம் | 500 |

| | |
|---|---|
| கிருபாகரன் | 500 |
| யோ.நந்தினி | 2000 |
| த.லாவண்யா | 500 |
| ச.அகிலன் | 500 |
| ராஜ்குமார் | 500 |
| கங்காதரன் | 500 |
| கு.விக்னேஸ் | 500 |
| பத்மா | 500 |
| ப.ராகுல் | 500 |
| ச.திரக்ஷன் | 500 |
| க.கமலநாதன் | 1000 |
| ச.கணேஷநாதன் | 500 |
| த.பிரநாத் | 500 |
| த.கிருபாளினி | 500 |
| கபிலன் | 500 |
| தீபாலன் | 500 |
| ற.தர்மிலா | 1000 |
| ம.கிரிசாந்தன் | 500 |
| வி.யோகன் | 1000 |
| ற.முரளிதரன் | 500 |
| த.தேவகணேஸ் | 1000 |
| வி.மகேஸ்வர் | 1000 |
| சிவபக்தராதன் | 500 |
| உஷா | 500 |
| த.ராஜன் | 500 |
| வி.ராஜசேகர் | 500 |
| ஜசிந்தன் | 500 |
| யோகராஜா | 500 |
| வி.பவிஜான் | 500 |
| மாணிக்கம் | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையூற்று அன்பர்கள்

| | |
|---|---|
| ப.சுப்பிரமணியம் | 2000 |
| த.நிரோஜினி | 1000 |
| ச.நவரட்ணராஜா | 300 |
| ச.சஜனி | 1000 |
| ச.நேசன் | 500 |
| ச.பத்மஸ்ரீ | 500 |
| க.சசிகுமார் | 500 |
| ச.கிருஷாந்தினி | 500 |
| தர்ஷினி | 500 |
| க.மங்களராணி | 500 |
| ச.வசந்தி | 500 |
| ம.தர்மகுலசிங்கம் | 500 |
| டிலக்ஷன் | 300 |
| ச.அமுதா | 300 |
| ச.ஸ்ரீதரன் | 10000 |
| பிரதீபன் | 500 |
| ப.யோதிகரன் | 500 |
| ம.சுதர்ஷினி | 300 |
| விவேகம்மா | 300 |
| ச.யமுனா | 500 |
| சிபக்ஷன் | 500 |
| ஜெ.தயானி | 300 |
| யோ.அமுது | 500 |
| மங்களேஸ்வரி | 500 |
| ச.நான்சி | 500 |
| ஐஸ்வரியா ஸ்ரோஸ் | 500 |
| நா.தம்பியையா | 500 |
| யோகராசா | 500 |

| | |
|---|---|
| கேதுராசா | 500 |
| சதீஸ்வரன் | 500 |
| யசோதினி | 500 |
| கோபி | 500 |
| லக்ஷயன் | 500 |
| ப.ரவீந்திரன் | 500 |
| ச.செல்லதுரை | 500 |
| ப.தயாபரணி | 500 |
| ச.நதியா | 500 |
| ஞா.பிரின்சி | 500 |
| ப.மதி | 500 |
| ஞ.யோகதாஸ் | 500 |
| ம.விஜயகுமார் | 500 |
| ர.வேலாயுதம் | 500 |
| க.ராஜன் | 1000 |
| கௌரி | 500 |
| க.பாலச்சந்திரன் | 500 |
| தங்கராசா | 1000 |
| வரதராசா | 2000 |
| பிரசாந்தினி | 2000 |
| பாஸ்கரன் | 500 |
| ம.கௌசிகா | 300 |
| சுஜீத்திராசா | 300 |
| ச.குபேஷிகன் | 500 |
| ந.நவரட்ணராஜா | 500 |
| த.மாளினி | 500 |
| ந.சுஜாதா | 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்று அன்பர்கள்

| | |
|---|---|
| ரவீந்திரன் | 500 |
| கே.பீ | 500 |
| ச.சுந்தராஜன் | 500 |
| ம.ராஜன் | 5000 |
| ச.பிரதீஸ் | 5000 |
| ற.ரம்மியபிரியா | 500 |
| ந.கோபு | 500 |
| ப.புவனேந்திரன் | 500 |
| சதானந்தன் | 500 |
| பரமேஸ்வரி | 500 |
| ராஜேஸ்கண்ணா | 1000 |
| கெ.குணாளன் | 1000 |

| | |
|---|---|
| மாணிக்கசீலன் | 1000 |
| மதிஇன்பராசா | 500 |
| நாகம்மாள் | 1000 |
| ந.சுதன் | 500 |
| க.கமலா | 480 |
| தர்ஷினி | 500 |
| சி.சங்கரப்பிள்ளை | 1000 |
| ரு.கமலாதேவி | 500 |
| க.ஹேமதாசன் | 1000 |
| இ.சிவகுமார் | 500 |
| ப.கனுஸா | 500 |
| ச.ஜெயந்தன் | 500 |

திருக்கோணேஸ்வரம் - 25,000.00

## பாரதிபுர அன்பர்கள்

| | |
|---|---|
| ம.ஜெயதீபன் | 500 |
| ம.பிரநாத் | 500 |
| ந.வசுந்தலாதேவி | 600 |
| ப.வாசுகி | 500 |
| அ.தவேந்திரராஜா | 500 |
| கோபிநாத் | 500 |
| ச.ரகு | 500 |
| க.சிவலிங்கம் | 1000 |
| இளையதம்பி | 1000 |

| | |
|---|---|
| வனிதாம்பாள் | 500 |
| சுவேந்திரஜா | 1000 |
| தனவந்திரி | 500 |
| ச.மகேஸ்வரி | 1000 |
| விஜி | 500 |
| தில்லைநாதன் | 5000 |
| மா.பொன்னம்பாள் | 500 |
| தங்கராசா | 500 |

திருக்கோணேஸ்வரம் - 25,000.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்ற வள்ளுவர் மொழிக்கு அமைய இம்மலரின் அந்தம் நன்றியுரைக்காய் விடப்பட்டமைக்கு நன்றி. என்றும் போலவே அன்று ஒரு நாள் வெள்ளிக்கிழமை சரஸ்வதி ஆலய மண்டபத்தின் வழிபாட்டு வேளையில் வழிபாடு முடிந்தபின் நாம் இந்த இடத்தை ஒரு கோவிலாக அமைப்பது பற்றிய விருப்பத்தை எமது இந்து மன்றத்தலைவர் திரு கு.நளினகாந்தன் ஆசிரியர் முன்மொழிந்தார்.

இதனை ஏனைய ஆசிரியர்களும் வரவேற்றனர். இதற்கு அமைவாக எமது அதிபர் அவர்களின் பூரண அனுமதியுடனும் ஆதரவுடனும் உருவாகியது தான் விபுலானந்த சிவாலயம். இந்த ஆலயம் தலைநிமிர்ந்து நிற்பதோடு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டு மண்டலாபிஷேகம், சங்காபிஷேகம் வரை செல்வதற்கு பலரின் அர்ப்பணிப்பும் ஆக்கமும் இருந்தது என்பது நிதர்சனம். அந்தவகையில் எமது விபுலானந்தா சிவாலயம் அடிக்கல் நாட்டிய ஆலடி விநாயகர் பிரதம குரு சுந்தரலிங்கம் தேசிகர் அவர்களுக்கு எமது நன்றிகள்.

மேலும் ஆலய கட்டிட அமைப்பு செய்த சி.இரட்ணசிங்கம் ஆசாரியார் அவர்களுக்கும் அவரின் உதவியாளார்க்கும் சிற்பாச்சாரி திரு ஜெயாவிற்கும் அதற்கு உதவிய திரு செல்வராஜா(சுப்றா)அவர்களுக்கும் வர்ண வேலைகள் செய்த திரு.க.ஸ்ரீதரன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். தொடர்ந்து மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளுக்கு வேண்டிய சகல பொருட்களையும் தந்துதவியது மட்டுமின்றி ஆரம்ப கிரியைகள் முதல் யாக பூசை மற்றும் மஹாகும்பாபிஷேகம் வரை மிகச்சிறப்பாக செய்த அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களுக்கும் ஏனைய சிவாச்சாரியார்களுக்கும் எமது சிரம்தாழ்த்திய நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது ஆலயத்திற்கு பொருளுதவி வழங்கிய குறிப்பாக சீமேந்து பைகள் வழங்கிய மிஸ்கூபி நிறுவன உத்தியோகஸ்தர்களுக்கும் வர்ண பூச்சு வழங்கிய பழைய மாணவர்கள் மூலஸ்தானத்திற்கு மாபில் வழங்கிய கிருஸ்ணா, இராஜாராம் அதனை பதித்து தந்துதவிய திரு.விமலன் அவர்களுக்கும் கதவு செய்து தந்த விஜயகுமார் அவர்கட்கும் ஓம குண்டம் மற்றும் யாகசாலை அமைத்த ஜீவரஞ்சன், பொறியியலாளர் அரவிந்தன், சிலைகள் பெற உதவிய ஆசிரியர் திருமதி சர்மிளா, ஸ்ரீஸகந்தகுமார் குடும்பத்திற்கும் எமது நன்றிகள்.

பொருட்களை கடனாக வழங்கிய ரோயல் கட்டுமான நிறுவன அதிபர் ஜெகதீஸ்வரனுக்கும் பல பொருளுதவி செய்த விக்னேஸ்வரன் கிருஸ்ணவேணி, விமலானந்தம், முத்துமாரி, ரவிக்காந்தன், நித்தியா குடும்பம் சக்தி பவுன்டேஷன் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் நவரெட்ணம் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மேலும் எமது சிவாலாயத்திற்கான பாடல் இயற்றிய திரு.மகேந்திரராசா அதற்கு இசையமைத்த செல்வன் நிக்ஸன் மற்றும் அதனை பாடிய சங்கீத ஆசிரியர் செல்வி பரமலிங்கம் நிஷா Smart Class மாணவிகளுக்கும் நன்றிகள்.

மண்டபத்தை அமைத்து தந்த மயூரன் குடும்பத்தினர்(லண்டன்) அவர்களுக்கும் மின்னிணைப்பு மற்றும் ஒலிபெருக்கி வழங்கிய திரு கோபி ஆசிரியர் அவர்களுக்கும் நன்றிகள். மேலும் லிங்கம் வழங்கிய தென்கயிலை அகத்திய ஸ்தாபக பிரதம சுவாமி அவரது இளைய குருவிற்கும் நன்றிகள். தொடர்ந்து ஆலய நிகழ்வுகளுக்கு ஒத்தாசை வழங்கிய அன்னதான குழு அலங்காரக்குழு வரவேற்புக்குழு கும்பாபிஷேகக் குழுக்களுக்கும் எமது ஆலயத்தை வரலாற்று பதிவாக மாற்றிய மலர்குழுக்களுக்கும் இணைந்து செயற்பட்ட ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னதானம் சமைப்பதற்கான பாத்திரங்களை வழங்கிய பாலையூற்று முருகன் ஆலயத்தினர் மற்றும் அன்னதானம் இலவசமாக சமைத்துதந்த சிவன் ஆலய சிவத்தொண்டு அமைப்பினர்களுக்கும் எமது சிரம் தாழ்த்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிகள். எண்ணைக்காப்புக்காக எண்ணை வழங்கிய அன்பருக்கும் மற்றும் ஆரம்பநிகழ்வு முதல் இறுதி வரை நின்று உதவிய பெற்றோர்களான திருமதி.சாந்தி, திரு.ரூபன், திரு.சதீஸ் மற்றும் திரு.ஓங்காரநாதன் திரு.அகிலேஸ்வரன் திரு.துஷியந்தன், திரு.கணேஸ், திரு.காந்தரூபன், திரு.ரமணன், திரு.பிரகீஸ் இலக்சுமி (கலாச்சார உத்தியோகஸ்தர்) அனைவருக்கும் இந்து மன்றத்தின் சார்பில் மனம் உகந்து நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

மேலும் அன்பு மனதுடனும் நல்ல மனதுடனும் நிதி உதவி செய்த சான்றோர்கள், வெளியூர், அன்பர்கள், நண்பர்கள், வெளிப்பாடசாலை குறிப்பாக கலைமகள் மகா வித்தியாலயம், செல்வநாயகபுரம் மகா வித்தியாலயம், ஸ்ரீ வாணி வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தொடர்ந்து எமது பாடசாலை அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலையில் இருந்து இடமாறிச் சென்ற ஆசிரியர்கள் மற்றும் நிதி சேகரிப்புக்காக அயல் கிராமங்களான அன்புவழிபுரம், பாரதிபுரம், செல்வநாயகபுரம், பாலையூற்று போன்ற இடங்களுக்கு கால்நடையாகச் சென்று நிதிசேகரித்துத்தந்த ஆசிரியர்களான திருமதிகளான உதயா, வேணி, மதிவதனி, லோஜி, கோகுலச்செல்வன், செல்விகளான அனுசியா, பிரியதர்ஷினி, யசோதினி, ஜெயஸ்ரீ, திரு.விக்னேஸ்வரன், திரு. விமலானந்தம், திரு.அர்ச்சுனன் ஆகியோர்க்கும் மாணவர்களான கார்த்திக், கிசோர், யது, லவரூபினி, மதிவதனி, நிவேதா, கலைவாணி, மிருஷிகா, தர்ஷனா ஆகியோருக்கும் இந்துமாமன்றம் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளது.

மேலும் மண்டலாபிஷேக நிகழ்வுகளுக்கான உபயகாரர்களுக்கும் குறிப்பாக இந்துக்கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் மாணவர்களுக்கும் சங்காபிஷேகம் செய்ய முன்வந்து நடத்திய ஆசிரியருக்கும் மன்றத்தின் சார்பில் இதயம் கனிந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் என்ற என் நன்றியுரையில் இந்துமன்றத்தலைவர் அவர்களுக்கு தலைவராகவே எல்லாவற்றையும் பொறுப்பெடுத்து தினமும் கஸ்டப்பட்டு, உடல் வருந்தம் பாராது, செயற்பட்டு உழைத்த தலைவர் குமாரசாமி நளினகாந்தன் ஆசிரியர் அவர்களுக்கும் நிதியினை பக்குவமாய் பொறுமையுடனும் சிரத்தையுடனும் சேகரித்து, செலவிட்டு செயற்பட்ட பொருளாளர் திருமதி.சார்மிலா ஆசிரியை அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

அத்தனைக்கும் மேலாக அவனின்றி ஒரு அணுவும் அசையாது என்பார்கள். எமது இக்கைங்காரியத்தினை இனிது நிறைவேற்றிய எல்லாம் வல்ல கோணேசப்பெருமானுக்கு நன்றிகள்.

திருமதி.நடேசபவானந்தம்
செயலாளர்
இந்துமாமன்றம்
தி / தி /விபுலாந்தா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







திருக்கோணமலை விபுலானந்தா கல்லூரி

# விபுலானந்த சிவ ஆலயம்

## ஏக குண்டபட்ச புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

## 15.07.2019 திங்கட்கிழமை

| கிரியை ஆரம்பம் | யாக பூசை | | எண்ணெய்க்காப்பு | மஹாகும்பாபிஷேகம் |
|---|---|---|---|---|
| 12.07.2019 | 13.07.2019 | [illegible] | 14.07.2019 | 15.07.2019 |
| வெள்ளிக்கிழமை | சனிக்கிழமை | | ஞாயிற்றுக்கிழமை | திங்கட்கிழமை |

சிவனடியார்களே!

[illegible] திருக்கோணமலை [illegible] விபுலானந்தா கல்லூரி [illegible] ஆனி மாதம் 30ம் நாள் (15.07.2019) திங்கட்கிழமை காலை 9.45 முதல் 10.30 மணி வரையுள்ள [illegible] கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் [illegible]

### கும்பாபிஷேக கிரியாகால நிகழ்வுகள்

1ம் நாள் விகாரி வருடம் ஆனி மாதம் 27ம் நாள் (12.07.2019) வெள்ளிக்கிழமை

காலை 9.00 மணிக்கு [illegible]

மாலை 5.00 மணிக்கு [illegible]

2ம் நாள் விகாரி வருடம் ஆனி மாதம் 28ம் நாள் (13.07.2019) சனிக்கிழமை

பகல் 10.00 மணிக்கு [illegible]

மாலை 5.00 மணிக்கு [illegible]

3ம் நாள் விகாரி வருடம் ஆனி மாதம் 29ம் நாள் (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை

காலை 7.00 மணிக்கு [illegible] காலை 10.00 மணிக்கு [illegible]

மாலை 6.00 மணிக்கு [illegible]

4ம் நாள் விகாரி வருடம் ஆனி மாதம் 30ம் நாள் (15.07.2019) திங்கட்கிழமை

காலை 6.00 மணிக்கு [illegible] காலை 09.45 [illegible] 10.30 மணி [illegible]

[illegible]

| [illegible] | கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு | [illegible] |
|---|---|---|
| [illegible] – திருக்கோணமலை<br>[illegible] – திருக்கோணமலை<br>[illegible] – திருக்கோணமலை | [illegible]<br>திருக்கோணமலை | [illegible]<br>திருக்கோணமலை |

| [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] |

குறிப்பு:

[illegible]

15.07.2019 [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org